
# புதிய ஜனநாயகம்

1-15 பிப்ரவரி 1998
ரூ. 4.00

## திராவிட அரசியலின் இன்னுமொரு பரிணாமம்



www.padippakam.com

## விலை மாதென்றால் மனித உரிமை கிடையாதா?

"எய்ட்ஸ்" மற்றும் பிற பால்வினை நோய்களைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அடிப்படை மனித உரிமையை மீறும் சட்டமொன்றைக் கொண்டுவரத் திட்டம் தீட்டியுள்ளது, மகாராஷ்டிரா அரசு. இச்சட்டத்தின்படி, விலை மாதர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி, அவர்களுள் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி, அப்பெண்கள் உடம்பில் "பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்" என அழியாத மையால் முத்திரை குத்தப்படுமாம். இச் சமூக ஒதுக்கல் சட்டத்தைக் கொண்டு வர ஆலோசனை தந்தது, மகாராஷ்டிரா அரசு மகளிர் கமிஷன் என்பதுதான் இதில் மிகுந்த வெட்கக்கேடு!

## 'தேச'பக்தி முகமூடியில் இந்துமதவெறி

பாபர் மசூதி இடிப்புக்கு முன் உ.பி.யில் அதிகாரத்தில் இருந்த இந்துமத வெறியர்கள், பள்ளிச் சிறுவர்களின் மனங்களில் இந்துத்துவா விஷத்தைத் திணிப்பதற்கு பாடத் திட்டங்களையே மாற்றியமைத்தனர். இப்பொழுது உ.பி. மாநில ஆரம்பப் பள்ளிகளில் வருகைப் பதிவின் பொழுது மாணவர்கள் "உள்ளேன் ஐயா" எனக் கூறுவதற்குப் பதிலாக "வந்தே மாதரம்" எனக் கூறவேண்டும்; தினமும் பாரத மாதாவைத் தொழுத பின் தான் வகுப்புகள் தொடங்கப்படவேண்டும் என உத்திரவிட்டுள்ளது கல்யாண் சிங் அரசு. இதை எதிர்ப்பவர்களுக்கு, "தேசபக்தியை வளர்க்கிறோம்" எனத் திமிராகப் பதில் அளித்துள்ளது, பா.ஜ.க.

## 'மார்க்சிஸ்டு'களின் புது அவதாரம்

காரல் மார்க்சுக்கு மதம் அபின்; ஆனால், நமது நாட்டு 'மார்க்சிஸ்டு'களுக்கு? சமீபத்தில் நடந்து முடிந்த 'மார்க்சிஸ்டு' கட்சியின் கேரள மாநில மாநாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தட்டிகளில், கிருஷ்ணர், விநாயகர் போன்ற இந்துக் கடவுள்கள், கிறித்துவ மதத்தைச் சேர்ந்த புனித ஜார்ஜின் உருவப் படங்கள் அலங்கரித்துள்ளன. ஜெயாவை அவரின் அடிப்பொடிகள் மேரியாக, ஆதிபராசக்தியாகச் சித்தரித்ததுபோல, 'மார்க்சிஸ்டு' கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித்தை கிருஷ்ணராக வரைந்து தள்ளி, அக மகிழ்ந்து போயினர் 'காம்ரேடு'கள். ஊர்வலத்திலோ, சிவன், சரசுவதி, சுப்பிரமணியன், ஐயப்பன், விநாயகர் படங்களைத் தூக்கிக் கொண்டு, "இந்து மதவெறியை ஒழிப்போம்" என 'மார்க்சிஸ்டு'கள் கோஷம் போட்டு வந்தது நல்ல வேடிக்கை!

## பா.ஜ.க. பாதையில் 'இடது'கள்

அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரான் மகாராஷ்டிரா மாநிலத்தில் மின் நிலையம் அமைப்பதை எதிர்த்துச் சவடால் அடித்து வந்த 'மார்க்சிஸ்டு'கள், கேரளாவில் என்ரான் முன் மண்டியிட்டுக் கிடக்கின்றனர். அம்மாநிலத்தில் என்ரான் 1500 கோடி ரூபாய் முதலீட்டில் மின்நிலையம் அமைப்பதற்கு 'மார்க்சிஸ்டு' தலைமை ஒப்புதல் அளித்துவிட்டது. என்ரான் எதிர்ப்பில் பல்டி அடித்ததில்தான் 'மார்க்சிஸ்டு'களுக்கும், இந்துமத வெறியர்களுக்கும் என்னவொரு ஒற்றுமை!

## "தேசத் துரோகிகளுக்கு பொது மன்னிப்பா?" — மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தென் கொரியாவின் முன்னாள் அதிபர்களான சன் - டூ - ஹ்வான், ரோடே - வூ இருவரும் ஆட்சிக் கவிழ்ப்பு சதிகள், இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டதற்காகச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, அவர்களது குடியுரிமைகளும் பறிக்கப்பட்டன. தற்பொழுதோ, அவர்கள் இருவருக்கும் பொது மன்னிப்பும், பறிக்கப்பட்ட குடியுரிமைகளையும் திருப்பி வழங்கி விடுதலை செய்துவிட்டது தென் கொரிய அரசு. இதை எதிர்த்து அந்நாட்டு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர். பொன்சி பல்கலை கழகத்தைச் சேர்ந்த 400 மாணவர்கள் அத்தேசத் துரோகிகளின் வீடு நோக்கி ஊர்வலமாகச் சென்ற பொழுது, அவர்கள மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசி, கண்மூடித்தனமாகத் தாக்கியது போலீசு பட்டாளம்.

போலீசாருடன் மோதும் தென்கொரிய மாணவர்கள்



## பயங்கரவாதத்தைத் தடுக்க ஏழைகள் பலிகடா!

தில்லி யூனியன் பிரதேச பா.ஜ.க. அரசு, தலைநகரில் வசித்து வருபவர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. நேர்மையான, உண்மையான, தகுதியான நபர்கள் / குடும்பங்களுக்குத்தான் அடையாள அட்டை வழங்கப்படுமாம்! மைய அரசும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி விட்டது. கிராமங்களில் வேலை எதுவும் கிடைக்காமல் தில்லி நோக்கி ஓடிவரும் ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் திட்டம் இது. ஆனால் ஆளும் கும்பலோ, இதன் மூலம் தீவிரவாதத்தை ஒழித்து விடுவோமாக்கும் எனப் பகற்கனவு காண்கிறது!

## நவீன நாஜிகளின் 'விடுதலைப் பகுதிகள்'!

ஜெர்மன் நாட்டில் நவீன நாஜிக்களின் கொட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் (முன்னாள் கிழக்கு ஜெர்மன்) 25 சிறு நகரங்கள் மற்றும் நகர்ப் புறங்களை, நவீன நாஜிகள் விடுவிக்கப்பட்ட பிராந்தியங்களாக அறிவித்துள்ளனர். இங்குள்ள விடுதிகள், நடன அரங்குகள், உணவகங்கள், சில குறிப்பிட்ட தெருக்களில் அந்நிய நாட்டினர் நுழைய தடை விதித்துள்ளனர். இடதுசாரிகளுக்கும் இந்தத் தடையுத்தரவு பொருந்தும். ஜெர்மன் அரசு இந்நகரங்களை "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள்" என அறிவித்துள்ளதோடு, அந்நிய நாட்டினர் இரவு நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என எச்சரித்துள்ளது.

## ஊருக்குதான் உபதேசம்

குழந்தை உழைப்பைத் தடை செய்ய வேண்டும் என எல்லோருக்கும் போதித்து வருகிறது அமெரிக்கா. ஆனால், அந்நாட்டில் முறையற்று எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி 2,30,000 குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பது அம்பலமாகியுள்ளது. இக்குழந்தை தொழிலாளர்களுள் மூன்றில் இரண்டு பங்கினர் 15 வயதுக்குக் குறைந்தவர்கள். மேலும், அந்நாட்டில் ஆயத்த ஆடை உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் அகதிக் குழந்தைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இவ்வெண்ணிக்கை இன்னும் பல இலட்சங்களைத் தாண்டி விடும். குறைந்த கூலி கொடுத்து இக்குழந்தைகளின் உழைப்பைச் சுரண்டியதன் மூலம், அமெரிக்க முதலாளிகளுக்கு கூடுதலாக 620 கோடி ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது.

## தொழிற்சங்க உரிமை பறிப்பு

தொழிலாளர்களின் உரிமைகளை மெல்ல மெல்ல பறித்துக் கொள்வதுதான் உலகமயமாக்கலின் நோக்கம். ஆஸ்திரேலியாவில், சம்பள உயர்வு உட்பட முதலாளிகள் கொண்டு வரும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் இனி தொழிற்சங்கங்களின் ஒப்புதல் பெறத் தேவையில்லை எனச் சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 13
இதழ்: 5-6
16 சன.'98 - 15 பிப்.'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# இந்துத்துவ பாசிச அபாயமும் முறியடிக்கும் வழியும்!

பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிவுகள் மற்றெந்த அணிகள், கட்சிகளையும் விட பாரதீய ஜனதாக் கட்சிக்குச் சாதகமாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதற்கு அறுதிப் பெரும்பான்மை கிட்டாமல் தொங்குநிலை நாடாளுமன்றமாக அமைந்தாலும், அதன் கூட்டணிக் கட்சிகளை வைத்தும், குதிரை பேரங்கள் நடத்தி காங்கிரசு மற்றும் பிற மாற்றுக் கட்சிகளைப் பிளந்தும் ஆட்சியைப் பிடித்து விடும் வாய்ப்பு இப்போது கூடியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி அணி ஆட்சிக்கு வருவதென்பது இந்துத்துவ பார்ப்பன - பனியா பாசிச சர்வாதிகாரம் நிறுவப்படுவதை முன்னறிவிப்பதாகும். இப்படிதான் ஜெர்மனியில் இட்லரின் நாஜிக் கட்சி சட்டபூர்வ வழியில் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று, பிறகு பாசிச ஆட்சியை நிறுவியதைப் போல, ஏதாவது ஒரு காரணத்தைச் சாக்காக வைத்து இந்து மதவெறி பாசிசம் நிறுவப்படலாம். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்நிய ஊடுருவல் தடுக்கப்பட்டு அணுஆயுத சக்தி வாய்ந்த உலக வல்லரசுகளில் ஒன்றாக நாட்டை மாற்றுவதாகவும், பிளவுவாத — தீவிரவாத சக்திகளை ஒடுக்கி நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதாகவும், ''ஒரே நாடு ஒரே சட்டம்'', ''தேசியப் பண்பாடு'' என்கிற அடிப்படையில் நாட்டின் ஒற்றுமையை நிறுவுவதாகவும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பும், பெண்களுக்குச் சம உரிமையும் வழங்குவதாகவும், உண்மையான மதச்சார்பற்ற, நிலையான ஆட்சியைத் தருவதாகவும் வாக்குறுதியளிக்கிறது.

ஆனால், இந்துத்துவ பார்ப்பன - பனியா பாசிச சர்வாதிகாரம் ஆட்சிக்கு வந்தால் முசோலினி, இட்லரின் பாசிச நாஜி அரசுகளைப் போலவே அண்டை நாடுகள் மீது விரிவாக்க - ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும், உள்நாட்டில் பல்வேறு இன, மொழி, பண்பாட்டு உரிமைகளை நசுக்குவதையும், சிறுபான்மையினர், பெண்கள், தாழ்த்தப்பட்டோர், தொழிலாளர்கள் மீதான அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையையும் ஏவிவிடும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக கம்யூனிசப் புரட்சியாளர்கள், இன உரிமைப் போராளிகளை பிரதான இலக்காக வைத்து ஒழித்துக் கட்ட பாசிச அரசு முயலும். அது மொத்த சிவில் சமுதாயத்தின் மீதான பயங்கரவாதத் தாக்குதலாக மாறும்.

இத்தகைய கொடிய மதவெறி பாசிசம் ஆட்சியைப் பிடிக்குமளவு வளர்ந்ததற்கு என்ன காரணம்; யார் பொறுப்பு? அது பகிரங்கமாக பாசிசத்தைப் பிரகடனம் செய்து, அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதைத் தடுக்க முடியாதா? ஒருவேளை, நாட்டுக்கும் மக்களுக்கும் அதீதத் தீங்கு விளைவிக்கும் மதவெறி பாசிசம் அதிகாரத்துக்கு வந்துவிட்டால், அது நிரந்தரமாக, நீண்டகாலத்துக்கு ஆட்சியில் இருக்குமளவுக்கு சக்தி வாய்ந்ததா? அதை முறியடித்து, வீழ்த்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு, விரைந்து செயல்படுவது தான் நாட்டு மக்களின் முன்னுள்ள இன்றைய முதன்மையான கடமையாகும். ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவ பரிவாரங்கள் இந்த அளவு வளர்வதற்கான வழிவகுத்துக் கொடுத்த காங்கிரசும் இன்னுமொரு ஆளும் வர்க்க வகுப்புவாத அரசியல் சக்தி தான். அதனிடம் மதவெறி பாசிச எதிர்ப்பை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். குறிப்பாக, இந்திரா - ராஜீவும், நரசிம்ம ராவும் வகுப்புவாத அரசியலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் முயற்சியில் பாரதீய ஜனதாவுடன் போட்டியிட்டு, பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள்தாம்.

''இந்துத்துவத்தின் வளர்ச்சி நாட்டின் ஒற்றுமைக்கு பேராபத்தாக விளைந்து விட்டது; அது ஆட்சிக்கு வருவது நாட்டுக்கே பேரழிவாக முடியும்'' என்று கூப்பாடு போடும் ஐக்கிய முன்னணிக் கட்சிகள், அதற்கு வெளியிலுள்ள ''தலித்'', ''சமூக நீதி''த் தலைவர்களான லல்லு பிரசாத் யாதவ், கன்சிராம் கட்சிகள், குறிப்பாக இடதுசாரி முன்னணிக் கட்சிகள்தாம் இந்து மதவெறி பாசிசத்தின் வளர்ச்சிக்கு முக்கியமாகக் குற்றஞ்சாட்டப்பட வேண்டியவர்கள். இவர்களில் பலரும் பல்வேறு காலக் கட்டங்களில் இந்துத்துவ சக்திகளுடன் கூடிக் குலாவியவர்கள். பாரதீய ஜனதாவினர் தீண்டத்தகாதவர் அல்லவென்று கன்சிராம், சிதம்பரம், மாறன், சந்திரபாபு நாயுடு உட்பட சிலர் இன்னமும் கருதுகின்றனர். இந்த மூன்றாவது அணியில் அநேகமாக அனைத்துக் கட்சிகளுமே பிழைப்புவாத, இலஞ்ச - ஊழல், கிரிமினல்மய மானவைதாம். இந்துத்துவ பாசிச எதிர்ப்பு இவர்களுக்கு முக்கியமானதில்லை. பதவியைப் பிடிப்பதற்காகவே லல்லு, முலயம், கன்சிராம், வகேலா, கவுடா ஆகிய தலைவர்கள் நாய்ச் சண்டையில் ஈடுபட்டு, தேர்தல் அரசியலில் கூட இந்துத்துவ எதிர்ப்புச்

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்

www.padippakam.com

# ஆட்சியைப் பிடிக்க எதையும் செய்வார்கள் இந்து மதவெறியர்கள்

"இதுதான் கடைசித் தேர்தல்; இந்த இறுதி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியை இப்போது கைப்பற்றினால்தான் உண்டு. இனி இப்படி ஒரு வாய்ப்பு வரவே வராது " என்ற தலைதெறிக்கிற வேகத்தோடு பாரதீய ஜனதாவும் அதன் இந்து மதவெறி பாசிசப் பரிவாரங்களும் வேலை செய்கின்றன.

"அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா" என்று நடக்கவே நடக்காத காரியத்தைக் கிண்டலாகச் சுட்டும் பொழுது சொல்வார்கள். என்ன ஆச்சரியம், அதிசயம்! அத்தைக்கு மீசை முளைத்து, புதுச் சித்தப்பாவுடன் எப்படி உறவு வைத்துக் கொள்வது என்று திணறுகிறார்கள் இந்த நாட்டு வாக்காளர்கள்.

அயோத்தியில் பாபரி மசூதியை இடித்த இந்து பாசிசப் பரிவாரங்கள் ஆந்திராவில் மசூதி கட்டுகிறார்கள்.

அயோத்தி பாபரி மசூதியை சிவசேனாத் தொண்டர்கள் தான் இடித்தார்கள் எனப் பெருமையுடன் திமிராகப் பேசிய அதன் ஆயுட்காலத் தலைவர் பால் தாக்கரே, அங்கே ராமன் கோவில் கட்டத் தேவையில்லை, தேசிய நினைவுச் சின்னம் அமைக்கலாம் என்று நேரெதிராகப் பேசுகிறார்.

உடன் கட்டை ஏறுவதையும் சதிமாதா கோவில் கட்டுவதையும் இன்னபிற பெண்ணடிமைத்தனத்துக்கும் வக்காலத்து வாங்கிய பாரதீய ஜனதாவின் குருமார்கள் பெண்களுக்கு இட ஒதுக்கீடு உட்பட பெண் உரிமை பேசுகிறார்கள்.

அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு இழிவு படுத்திய ஆதிக்க சாதி வெறிக் கும்பலின் குருபீடம் ஆர்.எஸ்.எஸ்.இன் நாகபுரி மகாசிவராத்திரி மாநாட்டின் அரங்கத்துக்கு அம்பேத்கர் பெயரிட்டு, மிகப்பெரிய அம்பேத்கர் படத்தைத் தொங்கவிட்டு, அம்பேத்கர் சிலைக்கு அத்வானி மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களும், நடிகர் - நடிகைகளும் பம்பாயில் நிகழ்ச்சி நடத்துவதைத் தடை செய்திருந்த பால் தாக்கரே பாக். தூதருக்கு அரசு மரியாதை விருந்தளித்து அத்தடையை நீக்கிவிட்டதாகத் தானே அறிவிக்கிறார்.

பா.ஜ.க. துணைத் தலைவர் - பார்ப்பன சனாதன வைதீகர் ஜன. கிருஷ்ணமூர்த்தியும், ஜெயலலிதாவும், சுப்பிரமணிய சாமியும், திராவிடப் பாரம்பரிய உரிமை பாராட்டும் வை.கோ., பா.ம.க.வின் ராமதாசுடன் சேர்ந்து இரம்ஜான் - இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கஞ்சி குடிக்கிறார்கள்.

இப்படி இன்னும் பல அதிசயங்கள் நடக்கலாம். எல்லாம் எதற்காக?

இவ்வளவு காலமும், மதச் சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட - பழங்குடிமக்களுக்கும், பெண்களுக்கும் எதிரான இந்து மத வெறி பாசிச சக்திகள் என்று தனது நடவடிக்கைகளால் இனங்காட்டிக் கொண்டன, ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா - சிவசேனா கும்பல். இதற்கு, மாறான ஒரு தோற்றத்தைத் தரும் வகையில் அதன் செயல்பாடுகளும் அரசியல் அணி சேர்க்கைகளும் இப்போது மாறி இருக்கின்றன.

✱ இது உண்மைதானா? இந்துத்துவப் பரிவாரங்கள் தமது கொள்கை - கோட்பாடு - இலட்சியங்களை உண்மையாகவே - பா.ம.க. ராமதாசும், வை.கோவும் கூறுவதைப் போலவே மாற்றிக் கொள்கின்றனவா?

✱ இல்லை, அவை தவிர்க்க முடியாத காரணங்களால் தமது நிலைப்பாடுகளில் சமரசம் செய்து கொள்ளும்படி நிர்பந்திக்கிப்படுகின்றனவா? நிர்பந்தங்கள் காரணமாகவா வது அவர்களிடையே மாற்றங்கள் நிகழ்கின்றனவா? இந்துப் பரிவாரங்களில் தீவிரவாதம் - மிதவாதம் ஆகிய இரண்டு பிரிவுகள் இருந்து, வாஜ்பாய் போன்ற மிதவாதிகளின் கை ஓங்கி இருப்பதைத் தான் இந்த மாற்றங்கள் குறிக்கின்றனவா?


✱ இதெல்லாம் கிடையாது; கொடிய ஓநாய்களாக இந்து மதவெறி பாசிஸ்டுகள், தனது கோரப் பற்களை மூடிக் கொண்டு, நீளமான வாலைக் கால் கவட்டைக்குள் மறைத்துக் கொண்டு, சாதுவான வீட்டு நாயைப் போன்று இளித்துப் பாசாங்கு செய்கிறார்களா? இந்தத் தேர்தல்களில் பதவியைப் பிடிப்பதுதான் அவர்கள் குறி! அப்புறம் அவர்கள் தமது இந்துத்துவ முகத்தைக் காட்டிப் பாய்ந்து விடுவார்களா?

இந்தக் கேள்விகளால் வாக்காளர்களும் பத்திரிகை - வானொளிக்காரர்களும் ஒரு பக்கம் திணறிக் கொண்டிருக்க, இசுலாமியப் பிரமுகர்கள், காங்கிரசுக் கட்சிமாறிகள், தாழ்த்தப்பட்ட - பழங்குடித் தலைவர்கள், நடிகர் - நடிகைகள் ஆகியோரைத் தம்பக்கம் இழுப்பதிலும், பெயர் போன கிரிமினல்கள், இலஞ்ச ஊழல் பேர்வழிகள், கொள்கை - நீதியிலான எதிரிகளுடன் ஓடிஓடிக் கூட்டுச்சேர்வதிலும், பிற கட்சிகளைப் பிளப்பதிலும் காங்கிரசை விடப் பன்மடங்கு விஞ்சிவிட்டன, இந்து மத வெறிப் பரிவாரங்கள்.

இதையெல்லாம் கண்ட மக்கள் தொடர்புச் சாதனங்கள் (பத்திரிக்கைகள் - வானொளிகள்) இன்னும் தேர்தல்களில் மக்கள் ஓட்டுப் போடாத குறை தவிர, பாரதீய ஜனதாவைப் பதவியிலேயே ஏற்றி விட்டு விட்டன. வாஜ்பாய் பிரதமராகிவிட்டதைப் போலவும், யார் யாருக்கு, என்னென்ன இலாகாகள் என்பதையும் கூட முடிவாக்கி விட்டன.

இந்த நிலையைச் சாதிப்பதற்கு பாரதீய ஜனதா வகுத்துக் கொண்டுள்ள வழி - இனிமேலும் சீதை வேடம் போட்டால் காரியம் பலிக்காது; திரௌபதியாகிவிட வேண்டியதுதான்; அதாவது அரசியலில் கற்புக்கரசி

**அம்பேத்கர் சிலைக்கு மாலையிட வரும் அத்வானி: பதவி நாற்காலியைக் குறி வைத்து....**





படிப்பகம்

www.padippakam.com

வேடத்தைவிட, இவருக்குப் பெண்டாட்டியாகி விடுவதுதான் பதவியைப் பிடிப்பதற்கான ஒரே வழி என்று முடிவு செய்துவிட்டது.

''நாங்கள் ஒரு வித்தியாசமான கட்சி'', ''மற்ற கட்சிகளைப் போல நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல'' ''எங்களுடைய கட்சி ஒழுங்கு கட்டுப்பாடு மிக்கது'' ''தேசத்துக்காகத் தியாகம் செய்வது தான் எங்கள் இலட்சியம்'' ''நாங்கள் இலஞ்ச ஊழல், கிரிமினல் அரசியலை எதிர்த்துப் போராடுபவர்கள்'', ''காங்கிரஸ் மறைந்து வரும் கட்சி; நாங்கள்தான் அதற்கு மாற்று, நாங்கள் தான் நிலையான ஆட்சி தரமுடியும்'', ''எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள் '' என்று சொல்லி கோடிக்கணக்கான மக்களை ஏய்க்க முயலுகிறது பாரதீய ஜனதா.



ரமலான் நோன்பு விருந்தில் ஜெயாவுடன் வைதீகப் பார்ப்பனரும், தமிழக பா.ஜ.க.வின் தலைவருமான ஜனா. கிருஷ்ணமூர்த்தி (இடது ஓரம்):முஸ்லீம்களை தாஜா செய்யும் தந்திரம்.

இவையெல்லாம் எவ்வளவு அப்பட்டமான புளுகுகள் என்பதை அதன் மிகச் சமீப கால நடவடிக்கைகளைக் கவனித்தாலே புரியும். உத்திரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதா, கன்சிராம் - மாயாவதி கும்பலோடு ஏற்படுத்திக் கொண்டிருந்த அரசியல் விபச்சாரக் கூட்டு முறிந்து போனதும், காங்கிரசு, பகுஜன் சமாஜ் கட்சி, ஜனதா தளம், சமாஜ்வாதிக் கட்சிகளைச் சேர்ந்த (கட்சி மாறி) எம்.எல்.ஏக்களில், அப்பட்டமான கிரிமினல் குற்றவாளிகள் உட்பட அனைவருக்கும் மந்திரி பதவி அளித்தது. இதன் மூலம் குதிரை வியாபாரம் நடத்துவது, சந்தர்ப்பவாத சாகசங்கள் புரிவது, கிரிமினல் மயமாக்குவதில் காங்கிரசு கயவாளிகளைக் காத தூரம் தள்ளி வென்று விட்டார்கள்; இந்திய நாடாளுமன்ற அரசியலில் ஒரு புதிய எல்லையை - சாதனையைத் தொட்டு விட்டார்கள்.

குறைந்தது 15 அரசியல் கட்சிகள் - குழுக்களுடன் தேர்தல் கூட்டு அமைப்பதற்கு பாரதீய ஜனதா கட்சி முயன்றது. தமிழகத்தில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவுடன் சித்தாந்த பூர்வமாக எப்போதும் உடன்பாடுடையதுதான் பாரதீய ஜனதா. அதனுடன் எப்போதும் கள்ளக் கூட்டு வைத்திருந்த அக்கட்சி, இப்போது அதைப் பகிரங்கமாக்கி, காங்கிரசுக்காரர்களுக்கு அதிரடி அதிர்ச்சியைக் கொடுத்தது. ஜெயாவோடு ராமதாசு, வை.கோ., சு.சாமி, வாழப்பாடி ஆகிய தனது ''அரசியல் எதிரி''களையும் கூட்டணிக்குள் இழுப்பதில் அக்கட்சி வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து ஆந்திராவில் லட்சுமி பார்வதி, கர்நாடகாவில் ராமகிருஷ்ண ஹெக்டே, ஒரிசாவில் பீஜு பட்நாயக்கின் மகன் நவீன், மேற்கு வங்கத்தில் மம்தா பேனர்ஜி காங்கிரசு, அசாமில் போட்டி அசாம் கன பரிசத் ஆகிய குழுக்களுடன் பேரங்கள் நடத்தியது. ஏற்கனவே, மராட்டியத்தில் சிவசேனா, பீகாரில் சமதா கட்சி, பஞ்சாபில் அகாலி தளம், அரியானாவில் பன்சிலால், உ.பி.யில் நான்கு கட்சி மாறிகளின் குழுக்கள் பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன.

இவற்றில் தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வதில் ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்கத்தில் அதன் கூட்டுக் கட்சிகளுடன் ஊடல்கள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய முன்னணியின் 13 கட்சி கூட்டணியைச் சந்தர்ப்பவாதக் கூட்டணி என்று கிண்டலும் விமர்சனமும் செய்து வந்த பா.ஜ.க., இப்போது ஏற்படுத்தியுள்ள கூட்டணி கொள்கை - திட்ட அடிப்படையிலானது அல்ல. அவற்றில் பெரும்பாலானவை பார்ப்பன அல்லது பிழைப்புவாதக் கும்பல்கள்தாம். மேற்கு வங்கம், அசாம், ஒரிசா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களில் இதுவரை ஒரு தொகுதிகளில் கூட பா.ஜ.க. வென்றதில்லை. இங்கெல்லாம் இளைய பங்காளியாகவோ, பெயருக்கோ தான் போட்டியடுகின்றது.

கலைக்கப்பட்ட 11-ஆவது நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியாக இருந்தும், 13 நாட்களே பதவி வகித்தும், மற்ற பல கட்சிகளால் ''தீண்டத்தகாத'' கட்சியாக ஒதுக்கப்பட்டு ஆட்சியிழந்தது பாரதீய ஜனதா. மத்தியில் ஆட்சியைப் பிடிப்பதற்கு, வேறு பிற கட்சிகளுடன் கூட்டுச் சேருவதும், குதிரை வியாபாரத்தில் ஈடுபடுவதும் தவிர அதற்கு வேறு வழியில்லை. பார்ப்பன - பனியா சமூக அடிப்படையைக் கொண்ட பா.ஜ.க. இந்தி பேசும் மாநிலங்கள், அவற்றை ஒட்டிய மேற்கு மாநிலங்கள் தவிர வேறெங்கும் வேரூன்றுவதும், பரவுவதும் அவ்வளவு எளிதானதல்ல. அதுவரைக் காத்திருக்கவும் அதன் அதிகார - பதவி வெறி இடந்தரவில்லை. அது பலமாக உள்ள மாநிலங்களிலும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை.

வகுப்புவாதம், இந்து மதவெறி, சிறுபான்மையினர் எதிர்ப்பு, மேல்சாதி வெறி, இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல்மயம், பாசிச அகங்காரம், சந்தர்ப்பவாதப் பித்தலாட்டம், தரகு அதிகார முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ சேவை ஆகிய அனைத்துப் பிற்போக்குத் தன்மைகளிலும் கடை கோடித்தனமான தன்மையுடையவர்கள்தான் பா.ஜ.க.வும் அதன் கூட்டாளிகளும். இக்கூட்டணி ஆட்சி அமைத்தால், அது காங்கிரசு கயவாளிகளுடைய ஆட்சியில் இருந்து எவ்வகையிலும் மாறுபட்டதாக இருக்காது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சி ஒரு எல்லையைத் தொட்டு நின்றுவிட்டதைப் போலவே, பா.ஜ.க.வின் நிலைமையும் ஆகிவிட்டது. நிலையான ஆட்சி தருவதாக வாக்குறுதி அளிக்கும் பா.ஜ.க. உண்மையில் நிலையற்ற தன்மைக்குரிய சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டது. பார்ப்பன - பாசிச சித்தாந்தமான இந்துத்துவாதான் அதன் தற்போதைய வளர்ச்சிக்கும் பலத்திற்கும் காரணமாக இருந்தது. அயோத்தி உட்பட அத்வானி கும்பலின் மதவெறி தாண்டவத்துக்குப் பிறகு தான் அதன் கிடு கிடு வளர்ச்சி துவங்கியது. ஆனால் அதே சித்தாந்தம்தான் ஆட்சியைப் பிடிப்பதற்கான பெரும்பான்மையைப் பெறுவதற்கும் தடையாக உள்ளது. ஒட்டுமொத்த சமுதாயமும் - அரசியலும் பிழைப்புவாதம் - கிரிமினல் மயம் - பண்பாட்டுச் சீரழிவுக்குள் தள்ளப்படுவதுதான் அந்தக் கட்சிக்கு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

பத்திரிகைகளின் கருத்துக் கணிப்பின் படியும், யதார்த்த நிலையும் நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. தனித்த பெரும்பான்மை பெற முடியாது. அதன் அணியேகூட ஆட்சி அமைக்குமளவு பெரும்பான்மை பெறுவது சந்தேகமே. ஆனால் அக்கட்சியும் அதன் அணியும்தான் நாடாளுமன்றத்தில் அதிக பலம் வாய்ந்ததாக இருக்கும். அந்த நிலையில் குதிரை வியாபாரம், மாற்றுக் கட்சிகளை பிளந்து, கூட்டுச் சேர்ப்பது ஆகிய சதிகளில் இன்னும் வெறியோடு பா.ஜ.க. ஈடுபடும். உத்திரப்பிரதேச அரசியல் அக்கட்சிக்கு நிறைய அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது.

சித்தாந்த பூர்வமாகவோ - அணுகுமுறையிலோ வாஜ்பாய்க்கும் அத்வானிக்கும் முரண்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், அயோத்தியில் கோவில் கட்டுவது, மதுரா - காசியில் உள்ள இசுலாமியர் வழிபாட்டுத் தலங்களைத் தகர்ப்பது ஆகிய பிரச்சி



படிப்பகம்

www.padippakam.com

னைகளில் பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். - விசுவ இந்து பரிசத்தும் மாறுபடுவதாகவும், அயோத்தி, காஷ்மீரில் 370 சட்டப்பிரிவை அகற்றுவது, பொது சிவில் சட்டம் ஆகியவற்றில் பா.ஜ.க.வுடன் அதன் கூட்டணிக் கட்சிகளான சமதாவும் அகாலி தளமும் வேறுபடுவதாகவும் பத்திரிகைகள் - வானொலிகள் சொல்வதெல்லாம் வெறும் கற்பனைதான்.

பா.ஜ.க.வும் அதன் கூட்டாளிகளும் தரப்போகும் ஆட்சி - சொற்ப காலமே ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணியினுடையதை விட்டுத் தள்ளுங்கள் - காங்கிரசு கயவாளிகளுடைய ஆட்சியை விட எந்த வகையிலும் மாறுபாடானதாக இருக்காது; மேலும் மோசமான இழிகுணங்களைக் கொண்டதாகவே இருக்கும். வகுப்பு வாதம், மதவெறி, சிறுபான்மையினர் எதிர்ப்பு, மேல்சாதி வெறி, இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் மயம், சந்தர்ப்பவாதப் பித்தலாட்டம், பாசிச அகங்காரம், அதிகாரத் திமிர், பதவி மோகம், தரகு அதிகார முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ சேவை ஆகிய அனைத்து பிற்போக்கு தன்மைகளிலும் கடைகோடித்தனமான நிலையுடையவர்கள்தான் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டாளிகள்.

ஆர்.எஸ்.எஸ் - சிவசேனா - விசுவ இந்து பரிசத் - பஜ்ரங்தள் போன்ற அணிகளைப் பின்பலமாக் கொண்டிருப்பதால், பா.ஜ.க.தான் உறுதியான, நீடித்த, நிலையான ஆட்சியை, இந்த அணிதான் தரமுடியும் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயலுகிறார்கள். ஆனால் அது எவ்வளவு தூரம் பலவீனமானது என்பது, பெரும்பான்மை பலத்தை பெற்று ஆட்சியில் இருந்தும் குஜராத் கட்சி பிளவுபட்டு ஆட்சி கவிழ்ந்து, போட்டி ஆட்சி ஏற்பட்டபோது நிரூபணமானது.

குஜராத் ஒரு விதிவிலக்கல்ல. பாசிஸ்டுகளிடம் தெரியும் கட்டுப்பாடும் உறுதியும் வெறும் தோற்றம்தானே தவிர உண்மையானதல்ல. அது ஒரு சிறுபான்மையின், ஒரு கும்பலின் அதிகாரவெறி; சாதி - மத வெறியின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அதனாலேயே அதன் பிளவும் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாது. ஆனால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் தீங்கு விளைவிக்காமல் தானே அது வீழ்த்தப்படவும் முடியாது.

சட்டபூர்வமான அங்கீகாரம் பெறவும், ஆட்சியைப் பிடிக்கவுமே தேர்தல் அரசியலைப் பாசிஸ்டுகள் பயன்படுத்துகிறார்கள். அவர்களின் உண்மையான பலம் மதவெறி, பாசிச அணிகள் - அமைப்புகளில்தான் உள்ளது. ஐக்கிய முன்னணி, இடதுசாரி முன்னணி முயலுவதைப் போல நாடாளுமன்றத்தில் தனிமைப்படுத்தித் தோற்கடிப்பதால் பாசிஸ்டுகளை வீழ்த்திவிட முடியாது. ஓட்டுப் பொறுக்குவதற்கு மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட அணிகளால் பாசிஸ்டுகள் அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்கவும் முடியாது. ஆகவே, பாசிச எதிர்ப்புப் படையாகத் திரளுவதுதான் நாட்டு மக்களுக்கு அவசியமானது.

• ஆர்.கே.

# திருவையாறு தியாகய்யரின் உடன்பிறப்பானார் கருணாநிதி!

தமிழிசையைத் திருடி கருநாடக இசையென்று பெயர் சூட்டி, அதற்குப் பார்ப்பனிய மதச்சாயம் முலாம் பூசி, அந்தத் திசையிலேயே அதை வளர்த்து, "இதுதான் தமிழகத்தின் இசை" என்று சாதிக்கின்ற மோசடிக்கெதிராக மக்கள் கலை இலக்கியக் கழகம் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் போராடி வருகிறது.

இந்த ஆண்டு 9.1.'98 அன்று திருவையாறில் தமிழிசையைத் திருடியதை அம்பலப்படுத்தி, தமிழைத் தீட்டு என இழிவுபடுத்தும் பார்ப்பனத் திமிரை எதிர்த்து நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். அக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர். காளியப்பன் மீது 'வகுப்பு மோதலைத் தூண்டியதாக'ப் பொய் வழக்குப் போட்டுச் சிறையிலடைத்தது போலீசு.

தமிழிசைச் சங்க விழாவைத் துவக்கி வைத்து, தமிழிசை வளர வேண்டும் என ஒருபுறம் பேசுகிறார் கருணாநிதி. மறுபுறம் 'தமிழில் பாடினால் தீட்டு' என்ற இழிவை எதிர்த்துப் போராடுவோர் மீது பொய் வழக்கு, சிறை என ஒடுக்குகிறார்.

சென்ற ஆண்டு தியாகய்யர் விழாவில் 'தமிழில் பாடு! இல்லையேல் தமிழகத்தை விட்டு ஓடு!' என முழக்கமிட்ட தோழர்கள் தடியால் தாக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். இந்த ஆண்டு திருவையாறில், விழாவின் போது ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. அதோடு மட்டுமின்றி தியாகய்யர் ஆராதனை விழாவையொட்டி, தமிழகம் முழுதும் ம.க.இ.க. தோழர்கள் வலைவீசித் தேடிக் கைது செய்யப்பட்டனர்.

மதுரையில் 5 பேர், திருச்சியில் 7 பேர், தஞ்சையில் 7 பேர் என ம.க.இ.க.வினர் சிறையிலடைக்கப்பட்டனர். பல இடங்களில் வீடு புகுந்து சோதனை என்ற பெயரில் குடும்பத்தினரை இழிவுபடுத்தினர். தமிழசை வளர வேண்டும் என வாய் கிழியப் பேசும் கருணாநிதியின் யோக்கியதை இவ்வளவுதான்.

கோலெடுத்தால் ஆடும் குரங்காக கருணாநிதி செயல்படுவது யாருடைய நலனுக்கு? நிச்சயமாக தமிழிசைக்காக அல்ல. திருவையாறில் அனுமதி மறுத்த போலீசு, பேச்சு வார்த்தை நடத்தி தஞ்சையில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதித்தது. ஆட்சியாளர்களின் முகத்தில் கரிபூசும் வகையில் 1500-க்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தின் போது திரண்டனர். தி.மு.க., ம.தி.மு.க.வைச் சேர்ந்த உள்ளூர் தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

எல்லா செய்தித் தொடர்புச் சாதனங்களையும் தமது பிடியில் வைத்துள்ள பார்ப்பனக் கும்பல் ம.க.இ.க.வின் கேள்விகளுக்குப் பதில் கூறாது, திரும்பத் திரும்ப ஒரே பொய்யைக் கூறுகிறது.

தமிழில் பாடினால் தீட்டு என இழிவுபடுத்துவதை மூடி மறைத்து விட்டு, தியாகைய்யர் தெலுங்கில்தானே பாடியுள்ளார் என்கிறது. ஆந்திராவில் தியாகய்யர் தெலுங்கைக் கேட்டுச் சிரிக்கிறார்கள். தியாகய்யர் தெலுங்கில் எழுதவில்லை. தமிழில்தான் தெலுங்கை எழுதியுள்ளார்.

பாதி உண்மை என்றைக்குமே அபாயகரமானது. தியாகய்யர் கீர்த்தனைகளை 'தெலுங்கில்' பாடுவதை யாரும் எதிர்க்கவில்லை. அங்கு தமிழில் பாடினால் தீட்டு என இழிவுபடுத்தும் பார்ப்பனத் திமிரைத்தான் ம.க.இ.க. எதிர்க்கிறது.

கருணாநிதி, தனது பதவிக்காகத் தமிழிசைக்குத் துரோகமிழைத்து, ம.க.இ.க. மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு பார்ப்பனக் கும்பலையும், அதனின் அடிவருடிகளையும் மனங் குளிரச் செய்யலாம். ஆயினும், ம.க.இ.க. திருவையாறில் தமிழ் ஒலிக்கும் நாள் வரை தனது போராட்டத்திலிருந்து ஓர் அடிகூடப் பின்னெடுத்து வைக்காது.

ம.க.இ.க., தமிழ்நாடு

# அநீதி மன்றம்

மதுரை மாநகரிலுள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள்ள தலைமை நடுவர் மன்றத்தில் நடக்கும் ஊழல், அநீதிகளுக்கு அளவே கிடையாது.

இந்த நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்குரைஞர் திரு. சிராஜுதீன் லஞ்சப்பணத்தை வாங்கிக் கொண்டுதான் ஒரு வழக்கின் தகுதியினை (MERIT) பற்றிப் பேசுகின்றார். பணம் தரப்படவில்லையேல் தகுதியான நியாயமான வழக்கில்கூட தேவையின்றி கடுமையாக ஆட்சேபிக்கிறார். நீதிபதியும் இவரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உடந்தையாக உள்ளார். நீதிபதிக்கோ அரசுத் தரப்பு வழக்குரைஞர் சொல்வதே வேதம்! அரசுத் தரப்பு வழக்குரைஞருக்கோ லஞ்சப் பணமே வேதம்! நீதியோ விழிபிதுங்கி நிற்கிறது.

வழக்குரைஞர்கள் ஊழல்களுக்குத் துணை போகாமல் உண்மைக்கும் நியாயத்திற்கும் போராட முன்வராதவரை, நீதி மன்றம் அநீதி மன்றமாகவே இருக்கும்; வழக்குரைக்க வழியிருக்காது.

தகவல்; ம.க.இ.க., மதுரை



படிப்பகம்

www.padippakam.com

# சோனியா வரவால் காங்கிரசு கரை சேருமா?

மர்மப் புன்னகையுடன் இருந்த 'மோனாலிசா' ஒரு வழியாக வாய் திறந்து பேசத் தொடங்கி விட்டார். பல கோஷ்டிகளாகப் பிளவுபட்டு, சிதறுண்டு இற்று விழுந்து கொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சிக்கு முட்டுக் கொடுக்கும் கடைசி முயற்சியாக சோனியாவும் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கி விட்டார். தனது வாரிசு பிரியங்காவுடன் ராஜீவ் கொலையுண்ட திருப்பெரும்புதூரில் தனது தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கிய அவர், பெங்களூர், ஐதராபாத் என்று தென் மாநிலங்களில் பறந்து, ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்ப ஒவ்வொரு நாக்குடன் பேசும் அளவுக்குத் தேர்ச்சியும் பெற்று விட்டார். பாசிஸ்டுகளுக்கே உரித்தான திமிரோடும், அண்டப் புளுகை அவிழ்த்து விட்டுச் சதிராடுவதிலும் பாசிச ஜெயாவையும் அவர் விஞ்சுகிறார். தேர்தல் நெருங்கியதும் தமிழ்நாடு, பீகார், மே. வங்கம் என்று காங்கிரசு மீண்டும் பிளவுபட்டுப் போயுள்ள நிலையில், எதைச் சொல்லி ஓட்டுப் பொறுக்குவது என்று புரியாமல் திணறிக் கொண்டிருந்த காங்கிரசுப் பெருச்சாளிகள், சோனியாவின் வருகையால் புத்துயிர் பெற்று குதூகலிக்கிறார்கள். ''அன்னை சோனியா'', ''நாட்டைக் காக்க வந்த தெய்வம்'', ''சோனியாதான் காங்கிரசு'' என்று துதிபாடி, செயற்கையாக கவர்ச்சி அலையை எழுப்ப எத்தனிக்கிறார்கள்.



திருப்பெரும்புதூரில் சோனியாவும், அவரது மகள் பிரியங்காவும்: விசுவாசத்தையும், அனுதாபத்தையும் ஒரு சேரக் கலந்து வகுக்கப்பட்டுள்ள காங்கிரசின் தேர்தல் உத்தி

சோனியாவின் பிரச்சாரத்தால் நாடாளுமன்றத்தில் இன்னும் 20 - 30 எம்.பி. பதவிகள் கூடுதலாகக் கிடைக்கும் என்று எழுதி வந்த பத்திரிகைகள், இப்போது சோனியாவின் வாய்க் கொழுப்பேறிய பிரச்சாரத்தால் மக்களிடம் இருக்கின்ற அரைகுறையான ஆதரவும் பறிபோய் விடும் என்று கேலி செய்யத் தொடங்கி விட்டன.

தனது கணவர் ராஜீவ் ஊழல் கறைபடியாத உத்தம சிகாமணி என்று காட்டுவதற்காக, போஃபர்ஸ் பீரங்கி பேர விவகாரத்தில் லஞ்சம் பெற்றவர்களின் பெயர்களைத் தைரியமாக வெளியிடுங்கள் என்று சவடால் அடித்துள்ளார், சோனியா. ஏற்கனவே மத்தியப் புலனாய்வுத் துறையும் பத்திரிகைகளும் பல ஆவணங்கள், டைரிக் குறிப்புகளின் அடிப்படையில் ராஜீவின் பீரங்கிக் கொள்ளையை நிரூபித்து அம்பலப்படுத்திய பின்னரும், இப்படிச் சவடால் அடிக்கிறார் என்றால், அது பாசிசத் திமிர் அன்றி வேறென்ன? ''போஃபர்ஸ் இலஞ்ச வழக்குத் தொடர்பாக சுவிஸ் நாட்டில் இருந்த பெறப்படும் ஆவணங்கள் விசாரணைக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்'' என இரு நாட்டிற்கும் இடையே ஒப்பந்த விதியிருப்பதும் சோனியாவின் சவடாலுக்கு இன்னுமொரு காரணம்.

தனது கணவர் வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக நின்ற மதச்சார்பற்ற போராளி என்று வேறு சோனியா கயிறு திரிக்கிறார். ''எம்.ஜி.ஆர். என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்'' என்று பாசிச ஜெயா புளுகியதைப்போல, ''பாபர் மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க என்னையே பலியாகக் கொடுப்பேன்'' என்று ராஜீவ் தன்னிடம் உறுதியளித்ததாகத் திடுக்கிடும் சினிமாப் படக்கதையை அவிழ்த்து விடுகிறார். ராஜீவ் உயிரோடு இருந்திருந்தால் பாபர் மசூதி இடிப்புச் சம்பவமே நடந்திருக்காது என்று நரசிம்மராவ் கும்பல் மீது பழி போட்டு ஆதாயமடையப் பார்க்கிறார். பாபர் மசூதி விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கும் போது, அங்கே இந்துக்கள் வழிபாடு நடத்திக் கொள்ள சட்டத்தை மீறி அனுமதியளித்த ராஜீவ், மதச்சார்பற்றவர் என்றால் காங்கிரசு முட்டாள் கூட நம்ப மாட்டான். இந்து ஓட்டுக்களுக்காக பாபர் மசூதியில் இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமை அளித்ததுதான், பாபர் மசூதி இடிப்புக்கே காரணமாக இருந்தது என்று நாடே நன்கறிந்த போதிலும், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கக் கிளம்பியுள்ளார் சோனியா.

தமது குற்றங்களை மூடிமறைத்து நாடகமாடுவதும் முதலைக் கண்ணீர் வடிப்பதும் பாசிஸ்டுகளுக்குக் கைவந்த கலை. இதை சோனியாவுக்குச் சொல்லியா தர வேண்டும்? 1984-ல் பஞ்சாபில் பாசிச இந்திராவின் ஆணைப்படி இந்திய இராணுவம் நடத்திய ''நீல நட்சத்திர'' பயங்கரவாத அடக்குமுறைக்கு சோனியா வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோருகிறார். காங்கிரசுக் கயவாளிகளோ இந்திரா சாவையெடுத்து டெல்லியில் நடத்திய சீக்கிய இனப் படுகொலைக்கு மன்னிப்பு கோருகின்றனர். 1984-இல் 3000 சீக்கியர்கள் டெல்லி வீதிகளில் காங்கிரசுக் குண்டர்களால் வெட்டிக் கொல்லப்பட்டபோது, ''ஒரு பெரிய ஆலமரம் விழும்போது நிலம் அதிரத்தான் செய்யும்'' என்று இந்நரவேட்டையை நியாயப்படுத்தியவர்தான் பாசிச ராஜீவ். டெல்லிப் படுகொலையைத் தலைமையேற்று நடத்திய சஜ்ஜன் குமார் இன்றும் கூட காங்கிரசில் செல்வாக்குடன்தான் உள்ளார். டெல்லி புறநகரில் அவர் தேர்தலில் போட்டியிடவும் முயற்சித்து வரும்போது, நீலிக் கண்ணீர் வடிக்கும் காங்கிரசை நாட்டு மக்கள்

> ''எம்.ஜி.ஆர். என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்'' என ஜெயா புளுகியதைப் போல, ''பாபர் மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க என்னையே பலியாகக் கொடுப்பேன்'' என்று ராஜீவ் தன்னிடம் உறுதியளித்ததாக அவிழ்த்து விடுகிறார், சோனியா. ஆனால், ராஜீவ் இந்துக்களின் ஓட்டுக்காக பாபர் மசூதியில் இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமை அளித்ததன் மூலம், இந்துமத வெறிக்குத் துணை போனார் என்பதை நாடே நன்கறியும்.



படிப்பகம்

www.padippakam.com

நம்பத்தான் முடியுமா?

இத்தனையும் போதாது என்று நாட்டுக்குத் தியாகம் செய்த குடும்பம்; நாட்டு நலனே தமது பாரம்பரியம், நாடு அபாயத்தில் உள்ள போது அதைக் காக்கப் பாடுபடுவது தனது தேசியக் கடமை என்றெல்லாம் உருக்கமான நாடக வசனங்களை அவிழ்த்து விட்டு அனுதாப அலையை உருவாக்கப் பார்க்கிறார். ராஜீவ் கொல்லப்பட்ட போதுகூட அனுதாப அலை நாடு முழுவதும் வீசாத நிலையில், சோனியாவைக் காட்டி அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனிக்கும் காங்கிரசின் கனவு ஒருக்காலும் பலிக்காது. ஜெயா, லட்சுமி போன்று பெண் என்பதாலேயே முன்னிறுத்தி, கவர்ச்சி அரசியல் மோகத்தில் ஆதாயம் தேடும் கீழ்த்தரமான கடைசி முயற்சிதான் இது.

நடைபெறவுள்ள தேர்தலில் முழுமையாக வெற்றி பெறுவோம் என்றும் காங்கிரசு கயவாளிகள் நம்பிக்கை வைக்கவில்லை. எனவேதான், ''நிலையான ஆட்சி என்பது எண்ணிக்கையால் வருவதில்லை'' என்றும், ''ஏதோவொரு அரசை நிறுவுவதற்காக அல்ல; நிலையாகச் செயல்படும் அரசை இயக்குவதற்காகவே தாம் போராடுவதாக'' தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். தேர்தலுக்குப் பிறகு பேரங்கள் - சதிகள் மூலம் புதிய கூட்டணி கட்டும் திட்டத்தைத்தான் தமது தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

தேர்தலுக்குப் பிறகு உருவாகும் கூட்டணியை வைத்து பின்னாலிருந்து ஆட்டி வைக்கும் அதிகார மையமாகத் தொடரவும், வாய்ப்பிருந்தால் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் திட்டத்தில்தான் காங்கிரசுப் பெருச்சாளிகள் உள்ளனர். அவசர நிலை பாசிச ஆட்சிக் காலத்தில் எந்தப் பதவியிலும் இல்லாத போதிலும் சஞ்சய் காந்தி அதிகாரம் செலுத்தியதைப் போல, ஒரு சட்டபூர்வ - அதே சமயம் அதிகார பூர்வமற்ற ஒரு அதிகார மையமாக இருக்கவே சோனியா முயற்சிக்கிறார். நேரு குடும்பத்தின் மீதுள்ள அடிமைத்தனமான விசுவாசத்தையும், நாட்டு மக்களிடம் செயற்கையாக நிறுத்தப்பட்டுள்ள கவர்ச்சி - அனுதாபத்தையும் தனது சொந்த நலன்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கிறார். மற்றபடி, நாட்டு மக்களைப் பற்றியோ, நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைப் பற்றியோ கொஞ்சமும் அறிந்திராத உல்லாச வாழ்வு நடத்தும் சோனியாவுக்கு அரசியல் பேச எந்த அருகதையும் கிடையாது.

''முன்பு இந்திராதான் இந்தியா; இப்போது சோனியாதான் நாடு!'' என்று முழங்கும் காங்கிரசுக்காரர்களின் அடிமைத்தனத்தை பத்திரிகைகள் கேலி செய்கின்றன. ஆனால் காங்கிரசுக் கயவாளிகள் இந்திராவுக்கோ, சோனியாவுக்கோ அடிமைகள் இல்லை. அதிகார வெறிக்கு அடிமைகளான பாசிஸ்டுகள். அவர்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத் தராவிட்டால், சோனியாவின் முதுகில் குத்தவும் தயங்க மாட்டார்கள்.

• குமார்

# அறிஞர்களைத் திணறடிக்கும் இராமதாசு, வை.கோ. அரசியல்

தேர்தல் அரசியல் கட்சிகளின் தொண்டர்கள், தமது தலைவர்கள் மீது எவ்வளவு தூரம் நம்பிக்கையும் விசுவாசமும் வைக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்குத் தலைவர்கள் எந்த அளவு துரோகமிழைக்கிறார்கள்; இறுதியில் தொண்டர்கள் எவ்வாறு ஏமாற்றமடைகிறார்கள் என்பதையெல்லாம் பற்றி அதிகம் எழுதத் தேவை இல்லை.

தேர்தல் - மாநாடு என்று வந்துவிட்டால் மாட்டைப் போல உழைக்கிறார்கள். தலைவர்களின் காலில் விழுகிறார்கள். தலைவர் கைதானால், மரணமடைந்தால் தீக்குளித்தும் சாகிறார்கள். சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டுகளையெல்லாம் சகித்துக் கொண்டு, வெட்கத்தை விட்டு மீண்டும் மீண்டும் ஓட்டுக் கேட்கப் போகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் தொண்டர்களின் அறியாமை, அடிமைப்புத்திதான் என்று விளக்கமளித்து கேலி கிண்டல் செய்கிறார்கள் ''மெத்தப்படித்த அறிவாளிகள்.'' ஆனால் இந்தப் படித்த அறிவாளிகளின் யோக்கியதை என்ன?

''எடுத்துக்காட்டாக, பாரதீய ஜனதாவைப் போன்ற தூய்மையான, நேர்மையான, கொள்கைபூர்வமான, நியாயமான கட்சி உண்டா? அதுதான் நாட்டுக்குத் தேவை'' என்று வாராவாரம் எழுதுகிறார், பேசுகிறார் ''துக்ளக் சோ'' ராமசாமி. ஆனால் அந்தக் கட்சியினரே அயோத்தி பாபரி மசூதியை இடித்தால், ஹவாலா ஊழலில் சிக்கினால், குஜராத் பதவிச் சண்டையில் பிளவுபட்டால், உ.பி.யில் குதிரை பேரம் நடத்தி கிரிமினல்களைக் கொண்டு ஆட்சி அமைத்தால், ஊழல் ராணி ஜெயாவுடன் கூட்டு வைத்தால், அவ்வப்போது - அந்தச் சமயங்களில் மட்டும் பா.ஜ.க.வும் ஓர் ஓட்டுச் சீட்டு அரசியல் கட்சிதான், மற்ற கட்சிகளைப் போலத்தான் என்று நொந்து கொள்ளும் பாணியில் எழுதுவார். அப்புறம் வழக்கம் போல பா.ஜ.க.வை ஆதரிக்கத் தொடங்கி விடுவார்.

இப்படி தானே பா.ஜ.க.வின் மீது விசுவாசமும், நம்பிக்கையும் வைக்கும்படி பிரச்சாரம் செய்துவிட்டு, அந்தக் கட்சி சந்தர்ப்பவாதமாகவும், தவறாகவும் நடந்து கொள்ளும் போது தனக்கும் அந்தக் கட்சிக்கும் சம்பந்தமில்லாதது போலவும், அந்தக் கட்சியின் நடவடிக்கைகளுக்குத் தான் எந்த வகையிலும் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியதில்லை என்று நழுவிக் கொள்வதும் நியாயமா? அதற்கு அவருக்கு உரிமை உண்டா?

அந்தக் கட்சியின், அதன் தலைவர்களின் சொல்லையும் செயலையும் தவறாக மதிப்பீடு செய்திருக்கிறார். அந்த மதிப்பீட்டை அவர் மட்டும் வைத்துக் கொள்ளாமல் அந்தக் கருத்துக்கு வரும்படி பேசியும் எழுதியும் பிறரிடம் பிரச்சாரம் செய்திருக்கிறார். இதற்கெல்லாம் தார்மீகப் பொறுப்பேற்று குறைந்த பட்சம் தனது தவறைச் சுயபரிசீலனை செய்து முன்வைக்க வேண்டாமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் முதலாளித்துவ பத்திரிகையாளர்களிடம், அதிலும் ''துக்ளக் சோ'' போன்ற பார்ப்பன - பாசிச இந்துத்துவ வெறியர்களிடம் நேர்மையான பதிலை எதிர்பார்க்க முடியாதுதான்.

ஆனால், மார்க்சிசம் - லெனினிசம் - மாவோயிசம், பெரியாரிசம், அம்பேத்கரிசம், நவீனத்துவத்தில் இருந்து பின் - நவீனத்துவம் வரை எல்லா ''இசங்களையும் விமர்சனா முறைகளையும்'' கற்றுத் தேர்ந்து திரை கண்ட அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பேராசிரியர்களிடம் இதுபோன்ற விவகாரங்களில் நியாயமான சுயபரிசீலனைகளையும் பொறுப்பையும் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

ஞானபீட விருது பெற்ற சிந்தனையாளர் பிரபஞ்சன், அரசியல் அறிஞர் பெ. மணியரசன், பேராசிரியர்கள் சுப. வீரபாண்டியன், இன்குலாப், பா. கல்யாணி, பழமலய், அ. மார்க்ஸ் போன்றவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ''டாக்டர் அய்யா ச. இராமதாசு''வைப் பற்றி எழுதியும் பேசியும் வந்த மதிப்பீடுகள் என்ன? இந்த மதிப்பீடுகளையெல்லாம் தவிடு பொடியாக்கி விட்டு, இன்று இந்துத்துவ, பார்ப்பன - பாசிச சக்திகளுடன் கை கோர்த்



''தலித் பிரிவிலிருந்து ஒரு சரியான தலைமை உருவாகும் வரை ராமதாஸ் தான் தமிழர்கள் தலைவர்'' என்று நிறப்பிரிகையில் பிரபஞ்சன் பிரகடனம் செய்தார். நிறப்பிரிகை நடத்திய அந்த ஆய்வரங்கத்தின் விவாதத்தில் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்கள் யாரும் இதற்கு முரண்பட்ட கருத்துக் கூறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

துக் கொண்டு விட்டார், இராமதாசு.

இந்தத் துரோகத்தில் மேலே சொன்ன அறிஞர் பெருமக்களுக்குப் பங்கில்லை என்றாலும், இத்தகைய சந்தர்ப்பவாத, ஒட்டுப் பொறுக்கி அரசியல் தலைவரை தமிழர் இன விடுதலைக்கும், சாதி சமத்துவ / சாதி ஒழிப்பு சமூக நீதிக்கும் நடத்தப்படும் இயக்கத்துக்கு மிகவும் நம்பகமான பங்காளியாக, நேச சக்தியாகச் சித்தரித்து வந்தார்களே அத்தகைய தவறான மதிப்பீடும், பிரச்சாரமும் செய்ததில் பங்கில்லையா?

பிரபஞ்சன், சில ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரன் பத்திரிகையில் எழுதி வந்த தொடர்களில் பல முறையும், பா.ம.க. தலைவரை உச்சியில் வைத்துக் கூத்தாடினார். பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு இராமதாசை இணை வைத்து எழுதினார். பெரியார் பாரம்பரியத்திற்குத் தகுதியான வாரிசு இராமதாசுதான் என்றும், பெரியாரின் மறு உருவம் எனவும், இனவிடுதலையையும், சமூக நீதியையும் அவரால் தான் சாதிக்க முடியும் எனவும் பொருள்படும் படி திரும்பத் திரும்ப எழுதினார். "தலித் பிரிவிலிருந்து ஒரு சரியான தலைமை உருவாகும்வரை ராமதாஸ்தான் தமிழர்கள் தலைவர்" (நிறப்பிரிகை எண் 5, பக் 57) என்று பிரபஞ்சன் பிரகடனம் செய்தார். நிறப்பிரிகை நடத்திய அந்த ஆய்வரங்கின் விவாதத்தில் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்கள் யாரும் இதற்கு முரண்பட்ட கருத்துக் கூறவில்லை.

1991-92-இல் பா.ம.க. இராமதாசுடன் தோளோடு தோள் உரசிக் கொண்டு "இயக்கங்கள் நடத்திய" பெ. மணியரசன், பா.ம.க., அப்துல் சமது, நெடுமாறன் ஆகியோரது கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி அமைத்த போது, அதை "வெறும் தேர்தல் கூட்டணி அல்ல, கொள்கைக் கூட்டணி" என்று கூரை மேல் நின்று கூவினார். இராமதாசைக் கொள்கைச் சிங்கமாகக் கருதித் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார். அதே இராமதாசு பின்னர் காங்கிரசுடன் தேர்தல் கூட்டுக்கு முயன்றபோது, "பா.ம.க. பல்டி," "பூனை வெளியே வந்து விட்டது" என்று தனக்குச் சம்பந்தமில்லாத மூன்றாவது மனிதனைப் பற்றி எழுதுவதைப் போல பெ. மணியரசன் எழுதினார். இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத அரசியல்வாதியுடன், தானே ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக் கொண்டு, கொள்கைக் கூட்டணி என்று பித்தலாட்டம் செய்ததற்கெல்லாம் கொஞ்சமும் பொறுப்பேற்கும் நேர்மையைக் காட்டவில்லை.

இராமதாசின் நெருக்கமான ஆலோசகர் என்று அறியப்படும் பா.கல்யாணி, திராவிட இயக்கத்தைப் போல ம.க.இ.க.வும் இந்துமதத்திற்கும், பார்ப்பனீயத்திற்கும் எதிராக வீர முழக்கமிடுகிறது; உரிய நடவடிக்கை எடுக்காத அரசையும் காவல் துறையையும் வன்மையாகக் கண்டிக்கும் ஒரு யுக்தியைக் கையாளுகிறது. இடைநிலை சாதியினரிடத்தில் நிலவும் சாதிய மேலாதிக்க உணர்வுகளைத் தயங்காமல் கண்டிப்பதில்லை என விமர்சிக்கிறார். ஆனால் "வெகுசனக் கட்சித் தலைவர்களில் டாக்டர். ச. இராமதாஸ் பல இடங்களில் தலித்துகளுக்கு ஆதரவு நிலை எடுத்துச் செயற்படுவதை இந்த இடத்தில்



**பா.ம.க. இராமதாசுடன் தோளோடு தோள் உரசிக் கொண்டு "இயக்கங்கள் நடத்திய" பெ. மணியரசன், அதே இராமதாசு பின்னர் காங்கிரசுடன் தேர்தல் கூட்டுக்கு முயன்ற போது, "பா.ம.க பல்டி", "பூனை வெளியே வந்து விட்டது" என்று தனக்குச் சம்பந்தமில்லாத மூன்றாவது மனிதனைப் பற்றி எழுதுவதைப் போல, நிறப்பிரிகையினரும் அவர்களது சகபாடிகளும் மா-லெ இயக்கத்தவர்களை நம்பத் தகாதவர்கள் என வசைபாடுவதும், அதற்கு நேராக இராமதாசின் புகழ் பாடுவதும் பலரும் அறிந்த உண்மை.**

நாம் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்" என்று புகழ்கிறார். நிறப்பிரிகையினரும் அவரது சகபாடிகளும் மார்க்சிய - லெனினிய இயக்கத்தவர்களை நம்பத்தகாதவர்கள் என வசைபாடுவதும், அதற்கு நேராக இராமதாசின் புகழ் பாடுவதும் பலரும் அறிந்த உண்மை.

தமிழ்த் தமிழர் இயக்கத்தின் தலைவர் பேரா. சுப. வீரபாண்டியனும் அவரது சகபாடிகளும் பா.ம.க. இராமதாசையும் அவரோடு வை.கோவையும், அவர்களது துரோகத் தேர்தல் கூட்டு உறுதியான பின்னரும் முட்டுக் கொடுத்து தாங்கிப் பிடிக்கின்றனர்.

"தேர்தல் ஆதாயத்துக்காக அரசியல் தலைவர்கள் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்? அப்படிச் செய்வதை நாங்கள் ஆதரிக்கிறோமா?" என்று கேட்டு அறிஞர் பெருமக்கள் நழுவி விடமுடியாது.

ஓர் அரசியல் கட்சியோ, அதன் தலைவனோ பேசுவதையும், எப்போதாவது விதிவிலக்காக சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் வைத்துக் கொண்டு போதிய அரசியல் அறிவு இல்லாத கட்சித் தொண்டன் நம்பலாம். ஆனால் சாதாரண அறிஞர்கள், ஆய்வாளர்கள் அல்ல; மற்றவர்களுக்கு வழிகாட்டும் வகையில் பேசியும், எழுதியும், ஆழமான ஆய்வுகள் நடத்தியும், தலித்தியம், நுண் அரசியல், இன - சமூக விடுதலை இயக்கம் காண்பவர்கள் அப்படிப்பட்ட மேலோட்டமான மதிப்பீடு செய்து செயல்படலாமா? அந்தக் கட்சி, அதன் தலைவர்கள், அதன் சமூக அடிப்படை, அதன் கொள்கை - கோட்பாட்டோடு தொடர்ச்சியான அதன் செயல்பாடுகளைக் கவனித்து மதிப்பீடு செய்திட வேண்டாமா?

வன்னியருக்கான இட ஒதுக்கீடு கோரிக்கையை முன் வைத்துத் தீவிரமான இயக்கமெடுத்தபோது அந்தச் சாதிக்குரிய மஞ்சள் கொடி, அக்கினிச் சட்டி, பல்லவ பாரம்பரியம் ஆகிய பிற்போக்குத் தன்மைகளையே குறியீடுகளாக வைத்தார், இராமதாசு. இன்னமும் அவையே தொடர மாமல்லபுரத்தில் ஆண்டு தோறும் இளைஞர் விழா கொண்டாடுகிறார்.

வன்னியர் சங்கத்தை அரசியல் கட்சியாக்கி தேர்தலில் குதிப்பது என்று முடிவு செய்த பிறகு, மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரிய கலவை அடிப்படையில், ஒட்டுப் பொறுக்க வசதியாக மக்களிடம் எடுபடும் எல்லாத் தேர்தல் அரசியல் கட்சிகளின் கவர்ச்சிகரமான அம்சங்களை இணைத்துக் கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டது. திராவிட இயக்கத்தின் நகலாகவும், அதே சமயம் அதைவிடத் தீவிரமாகவும், கம்யூனிச சாயமும் பூசியதாக ஒரு வீரிய ஒட்டுரகத் தலைவராக இராமதாசு முன்நிறுத்தப்பட்டார். இதற்கெல்லாம் அவருக்கு துணை நின்று ஆலோசனைகள் வழங்குபவர்களாக பா. கல்யாணி போன்ற சில பேராசிரியர்கள் விளங்கினார்கள்.

தேர்தலுக்கு நிற்கமாட்டேன், பதவிகள் வகிக்க மாட்டேன், சொந்தக் காசைச் செலவு செய்துதான் கட்சி வேலைகள் செய்வேன் என்று ஒரு வணக்கத்துக்குரிய குறியீடாகக் காட்டிக் கொண்டார், இராமதாசு. ஆனால் கட்சியின் சகலவிதமான முடிவெடுக்கும், எல்லோருக்கும் மேலான நிறுவனத்தலைவர் - "கிங்மேக்கர்" ஆகத் தன்னை இருத்திக் கொண்டார்; வன்னியர் மட்டுமே இருந்தால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதால் பிற சாதிகளுடன் கூட்டுச் சேரவும், தாழ்த்தப்பட்டவர்களை ஈர்க்கவும் நாடகமாடத் தொடங்கினார், அவர்.

கட்சி ஆரம்பிப்பதற்கு முன்போ, பின்னர் உடனடியாகவோ இராமதாசு புலிகள் ஆதரவு நிலையில் ஆர்வம் காட்டியவரல்லர். ஈழத்தை ஆக்கிரமித்து தமிழர்களைப் படுகொலை செய்து வந்தபோதும், அதற்குக் காரணமான ராஜீவுடன் கூட்டணிக்காக அலைந்தார். '89 தேர்தலில் அன்றைய ஆளுநர் அலெக்சாண்டர், மூப்பனார் மூலம் கூட்டணி பேரங்கள் நடத்தினார். தொகுதிப் பங்கீடு, நிதி உதவி விவகாரங்களில் பேரம் முறிந்து

**திராவிட இயக்கத்தின் நகலாகவும், அதே சமயம் அதைவிடத் தீவிரமாகவும், கம்யூனிச சாயமும் பூசியதாக ஒரு வீரிய ஒட்டுரகத் தலைவராக இராமதாசு முன் நிறுத்தப்பட்டார். இதற்கெல்லாம் அவருக்குத் துணை நின்று ஆலோசனைகள் வழங்குபவர்களாக பா. கல்யாணி போன்ற சில பேராசிரியர்கள் இருந்தனர்.**



படிப்பகம்

போய் தேர்தல் புறக்கணிப்பு முடிவெடுத்தார். '91 தேர்தலில், பண்ருட்டி இராமச்சந்திரன் வருகைக்குப் பிறகு ஈழ ஆதரவை அடக்கி வாசித்ததோடு மீண்டும் காங்கிரசுக் கூட்டுக்கு முயன்று, தோற்று, தி.மு.க. அணியும் நிராகரித்த நிலையில் சமது, நெடுமாறன், இளைய பெருமாள், மணியரசன் அடங்கிய 'கொள்கைக் கூட்டணி' கண்டார்.

'93 இல் வந்த இடைத்தேர்தலில் பண்ருட்டியின் தூண்டுதலின் பேரில், தானே வலியப் போய் காங்கிரசை ஆதரித்தார். அப்போதுதான், ''பா.ம.க. காங்கிரசு கட்சியோடு கூட்டணி சேர வாய்ப்புண்டு என்ற செய்தி, அக்கட்சியை நம்பும் நல்லவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. பா.ம.க. இன்னொரு தேர்தல் கட்சிதானா என்ற ஐயத்தை உண்டாக்கி இருக்கிறது'' என மணியரசன் எழுதினார். காங்கிரசுதான் பா.ம.க.வுடன் கூட்டுச் சேர மறுத்து நிராகரித்தது.

பிறகு இராமதாசு தானே வலியப் போய் தி.மு.க.வுடன் அணி சேர்ந்து, விழுப்புரத்தில் விழா எடுத்து கருணாநிதியை முதல்வராக்குவேன் என்று சபதமெடுத்தார். ஆனால் '96 தேர்தலில் தி.மு.க.வுடனும், பிறகு வை.கோவுடனும் கூட்டணி பேரங்கள் நடத்தி, அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தனித்துப் போட்டியிட்டார். தேர்தலுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கருணாநிதியை ஆதரித்தார். '98 தேர்தலுக்காக கருணாநிதி, ஜெயா இருவருடனும் ஒரே சமயத்தில் பேரங்கள் நடத்தி, அதிகத் தொகுதிகள் கொடுத்த அதிமுக, பா.ஜ.க அணியில் சேர்ந்து கொண்டார். கொள்கை ரீதியில் முரண்பட்ட கட்சிகள் கூட்டுச் சேர்ந்தால் ''இது கூட்டணி அல்ல; தொகுதி உடன்பாடுதான்'' என்று வழக்கமாக ஓட்டுக் கட்சிகள் மழுப்பும். அப்படிக் கூட இல்லாமல், பா.ஜ.க. என்ற இந்துத்துவ பாசிசக் கட்சியை, முற்போக்கான மாற்றமடையும் கட்சியாக சித்தரித்துப் புகழும் நிலைக்கு இராமதாசு போயுள்ளார்.

ஆகவே, சந்தர்ப்பவாதக் கூட்டணி அரசியல் இராமதாசுக்குப் புதிதல்ல. அதற்கு ஏற்கனவே பலமுறை முயன்றவர்தான். வன்னியர் அனைவரும் தம் பக்கமிருப்பதாகச் சொல்லி அவர் தொகுதிப் பங்கீடு கோருவதை பிற கட்சிகள் ஏற்காததால்தான் பேரங்கள் பலவும் முறிந்தன. வன்னியர்களிலே நாயக்கருக்கும் படையாச்சிக்கும் தனித்தனி கட்சி வைத்து மாணிக்கவேலரும் இராமசாமி படையாச்சியும் 30-க்கும் மேலான தொகுதிகளில் 1952 இல் வென்றனர். இன்று இராமதாசுக்கு அந்த பலமும் கிடையாது என்பதுதான் உண்மை.

இராமதாசின் அரசியல் போக்கைத் தீர்மானிப்பது தொண்டர்களோ, பேராசிரியர்களின் ஆலோசனையோ அல்ல. கட்சி அரசியலுக்கும் மேலாக பண்ருட்டி, வாழப்பாடி போன்ற தம் சாதிக்காரர்களுடன் வைத்துள்ள உறவுதான். பெரியாரின் பகுத்தறிவு பாரம்பரிய உரிமை பாராட்டும் இராமதாசு, வன்னியரிலும் காங்கிரசு வன்னியராகப் பார்த்து, அதிலும் எம்.பி. குடும்பமாகப் பார்த்து மகனுக்கு மணமுடித்தார். ஊழல் ராணி ஜெயா, மணமக்களுக்கு 5 இலட்ச ரூபாய் வைர நகை பரிசளித்தபோது அதையும் வாங்கி நியாயப்படுத்தினார்.



தமிழ்த் தமிழர் இயக்கத்தின் தலைவர் பேரா. சுப. வீரபாண்டியனும் அவரது சகபாடிகளும் பா.ம.க. இராமதாசையும் அவரோடு வை.கோ.வையும், அவர்களது துரோகத் தேர்தல் கூட்டு உறுதியான பின்னரும் முட்டுக் கொடுத்துத் தாங்கிப் பிடிக்கின்றனர்.

கருணாநிதி தங்களை மதிக்கவில்லை, நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்; பா.ம.க.வை தேர்தல் ஆணையம் அங்கீகரித்து, சின்னம் தருவதற்காக இந்தக் கூட்டணியில் சேர்ந்ததாக இராமதாசு தரப்பில் வாதம் வைக்கப்படுகிறது. கொள்கையைக் கைவிட்டு இந்த அங்கீகாரமும் சின்னமும் எதற்கு? கொள்கையா, சட்டவாத அங்கீகாரமா, அரசியல் ஆதாயமா என்கிறபோது பெரியார், அண்ணாதுரை, வீரமணி என்று எல்லோரும் செய்ததைத்தான் இராமதாசும் செய்கிறார். இந்த வகையில் அவர் திராவிடப் பாரம்பரிய உரிமை கோருவது நியாயம்தான்!

ஆகவே இராமதாசு இப்படி சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்து துரோகம் செய்து விட்டார் என்பது வியப்பானதல்ல. அவரது முரண்பட்ட நிலை மீது முதலாளித்துவப் பத்திரிகைகளே கேள்விகள் எழுப்புகின்றன. இங்கே கேள்விக்குள்ளாவது, அவரைத் தூக்கிப் பிடித்த அறிஞர் பெருமக்களது அறிவு நாணயம்தான். இது வழக்கமாக வந்து போகும் தேர்தல் அல்ல. இந்துத்துவ பார்ப்பன - பனியா பாசிச கும்பல் ஆட்சியைப் பிடிக்க எத்தணிக்கும் தேர்தல். அதற்கான வாய்ப்பும் கூடுதலாக உள்ள நிலையில், அதற்குத் துணைபோகும் துரோகியாகிறார் இராமதாசு. இதுவரை இராமதாசைப் புகழ்ந்து மதிப்பீடு செய்ததைவிட, இப்போதாவது அவரது துரோகத்தை எதிர்த்துப் போராடாமல் பார்வையாளர்களாக இருப்பதும், எல்லாம் முடிந்த பிறகு பிரேதப் பரிசோதனை செய்யும் மருத்துவரைப் போல ஆய்வுகள் நடத்துவதற்காகவும் காத்திருக்கிறார்களே, அது எத்தகைய அறிவு நாணயம்!

''பாம்பும் சாகாமல், தடியும் உடையாமல்'' காரியங்கள் சாதிக்க முயலும் பல்வேறு

> **இராமதாசு - வை.கோ. இப்படி சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்து துரோகம் செய்து விட்டனர் என்பது வியப்பானதல்ல. இங்கே கேள்விக்குள்ளாவது அவர்களைத் தூக்கிப் பிடித்த அறிஞர் பெருமக்களது அறிவு நாணயம்தான்.**

தமிழின - சமூக நீதி அமைப்புகளின் வகைமாதிரித் தலைவர் தமிழ் தமிழர் இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் சுப. வீரபாண்டியன். புலிகள் ஆதரவு என்கிற ஒரே அடிப்படையில் இந்த அமைப்புகளின் தலைவர்கள் ஒருவருக்கொருவர் முதுகு சொறிவது வழக்கம்தான். ஆனால் இந்துத்துவ பார்ப்பன - பாசிச சக்திகளுடன் இராமதாசும், வை.கோவும் தேர்தல் கூட்டு வைத்துத் துரோகமிழைத்து வரும்போதும், அத்துரோகத்தை மூடிமறைத்து உறவாடும்.பாசத்துக்கும் சான்றாக, வகைமாதிரியாக அதே சுப. வீரபாண்டியன் விளங்குகிறார்.

''காங்கிரசை ஆதரிப்பதாக அண்மையில் வெளிவந்த மிக மோசமான அறிவிப்பைத் தவிர, மற்ற எல்லா வகையிலும் எனக்குப் பிடித்தமான இன்றைய அரசியல் தலைவர் டாக்டர் இராமதாசுதான்'' என ஜூன் '93 'இனி'யில் சுபவீ எழுதினார். இதற்கு இரு மாதம் முன்பு 'பா.ம.க. - காங்கிரசு கூட்டாமே? இதை ஏற்றுக் கொள்வீரா? அப்படி ஏற்பட்டால் உங்கள் கருத்து என்ன?' என்ற கேள்விக்கு சுபவீ பதில் கூறும்போது ''...ஊகம்தான். உறுதியாவதற்குள் அவசரப்பட்டு நாம் கருத்துக் கூறுவது சரியாக இருக்காது. இருந்தாலும், இப்போதைக்கு இரண்டு செய்திகளைச் சொல்லி வைக்கிறேன். 1. 'கூட்டணி' என்னும் கோட்பாட்டையே ஏற்பதில்லை. அது ஒரு மோசடி. 2. கட்சித் தொண்டர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பினும், டாக்டர் இராமதாஸ் எளிதில் வளைந்து கொடுத்துவிட மாட்டார் என்பது என் தனிப்பட்ட நம்பிக்கை'' என முடித்துக் கொண்டார்.

நம்பிக்கை பொய்த்த பின்னும் அடுத்த இதழில் திரும்ப எழுதும் போது, அதிர்ச்சி ஏமாற்றம் எனத் தொடங்கி, நேரில் சண்டையிட்டு 'செவி கைப்பச்' சொன்னதாகக் கூறுகிறார். டாக்டரின் சந்தர்ப்பவாத விளக்கத்தை 'அப்பாவி'த் தனமாக விவரிக்கிறார். முடிவாக ''தமிழ் தேசத் தன்னுரிமைக் கொள்கையிலிருந்தும், பார்ப்பனீய எதிர்ப்பிலிருந்தும் பா.ம.க. ஒரு நாளும் பின் வாங்காது என்று டாக்டர் உறுதியளித்தார். இத்தனைக்குப் பிறகும், அந்த அறிவிப்பை எங்களால் இன்னமும் செரித்துக் கொள்ள முடியவில்லை'' என எழுதுகிறார்.

இது டாக்டரின் சந்தர்ப்பவாத மோசடியை விட மிக மோசமானதல்லாமல் வேறு என்ன? டாக்டரின் உறுதி மொழியை மட்டுமே நம்பும் இவர் நம்மையும் நம்பச் சொல்கிறார். அப்படி நம்புவதற்கு என்ன ஆதாரத்தை முன் வைக்கிறார்? ஏதுமில்லை. தலைவரை நம்பும் அப்பாவித் தொண்டனுக்கும், ஆய்வாளராக வலம் வரும் இவருக்கும் வேறுபாடு இல்லை.

இதை உறுதிப்படுத்த இன்னுமொரு சான்று. தமிழகத்தில் ஈழ அகதிகள் கூட இருக்கக் கூடாது என விரட்டியடித்த கொடூரன் வாழப்பாடி. இந்தக் கழிசடையுடனும் இராமதாசு 96 தேர்தலில் கூட்டணி கண்டார். இது பற்றி வாசகர் ஒருவர் சுபவீக்கு கேள்வி எழுப்புகிறார், அது:

'ஒரே சாதியாக இருந்தாலும் எல்லாக் கொள்கைகளிலும் வேறுபட்டு நிற்கும் வாழப்பாடியும் இராமதாசும் எப்படி ஒத்துப் போக



படிப்பகம்

www.padippakam.com

முடிகிறது?'

இதற்குத் தெளிவாக பதில் கூற மறுக்கும் சுபவீ ஒற்றை வரியில் நழுவுகிறார்: 'உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறதோ என அச்சமாக உள்ளது!'

தி.மு.க.வில் வை.கோ.வா, ஸ்டாலினா எனப் போட்டி வெளி வந்ததுமே, 'இனி' பத்திரிகை "வளர்கிறாரா வை.கோ" என அட்டைப்பட சிறப்புக் கட்டுரை வெளியிட்டது. நான்கு பக்கங்களில் வை.கோ துதி பாடியது. மாவோவை நினைவு கூர்ந்து, ஒப்பீடு செய்து வழிகாட்டியது.

தி.மு.க.விலிருந்து கொள்கை வேறுபாட்டால் வை.கோ. பிரியவில்லை. அவர் பின்னே திரண்ட கட்சித் தொண்டர்களில் பெரும் பகுதியினர், தி.மு.க.விலிருந்து பிழைப்பு நடத்த முடியாத இரண்டாம் மட்டத் தலைவர்களும், திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளும்தான். தமது சமூக விரோதச் செயல்களுக்குப் பாதுகாப்பு எனத் திரண்டவர்களின் தலைவராகத்தான் வை.கோ. இருந்தார்.

ஆனாலும் வை.கோ.வின் புலி ஆதரவு வாய்ச் சவடாலை நம்பி சில இளைஞர்களும் வை.கோ. பின் திரண்டனர். அந்த இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாகவே வை.கோ. துதி பாடினர் சுப.வீ போன்றவர்கள்.

இவற்றை எல்லாம் மீறி வை.கோ.வின் சாயம் வெளுக்கத் தொடங்கிய போது 'இவர்களும் இப்படியா?' என அட்டைப்பட சிறப்புக் கட்டுரை எழுதினார் சுப.வீ. வை.கோ.விற்கு திறந்த மடல் என அமைந்த அது பொய்யாகவே தொடங்குகிறது:

"..தமிழர் நலம் காக்கவும், இந்தித் திணிப்பை எதிர்க்கவும், விலையேற்றத்தைத் தடுக்கவும் நடத்தப்படுகின்ற எழுச்சிப் பேரணி எல்லா விதத்திலும் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

வடசென்னை தாதா ஏழுமலை நடத்திய அந்த மாநாட்டு விளம்பரங்களில் வை.கோ. முகங்களிலிருந்த அளவு மேற்சொன்ன கருத்துக்கள் இல்லை. கருணாநிதி வழியில் தனிநபர் துதியாகத்தான் மாநாடும் முடிந்தது.

திறந்த மடலின் இறுதிப் பகுதியில், "இல்ட்சியங்களைப் புறந்தள்ளிவிட்டு, நாற்காலி அரசியலே குறிக்கோளாய் கட்சி நடத்தும் கலைஞரிடமிருந்து முற்றிலுமாய் மாறுபட்டு, திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் நீங்களாவது காலூன்றி நிற்பீர்கள் என நம்புகிறோம். பார்ப்பன எதிர்ப்பில் நீங்கள் பின் வாங்குவது, எங்களின் நம்பிக்கையைக் குலைத்துவிடுமோ என அஞ்சுகிறோம்...................

தோழமையோடும் வேதனையோடும்,
சுப. வீரபாண்டியன்"

வெறும் பேச்சை மட்டும் வைத்து திராவிட இயக்க அடிப்படைக் கொள்கைகளில் ஊன்றி நிற்பார் என்று எப்படி முடிவு செய்வது? தலைமைப் போட்டியில் ஸ்டாலினுக்கு எதிராக மட்டுமே தி.மு.க.விலிருந்து வெளியேறியவரிடம் கொள்கையை எதிர்பார்ப்பது ஏமாளித்தனம். தெரிந்தே இப்படிக் கேட்டால் அது மக்களை ஏய்ப்பதுதான்.

இதற்கிடையே வை.கோ. மக்களிடையே சிறிது சிறிதாக அம்பலமாகத் தொடங்குகிறார். அதை ஒட்டி 'இனி' இதழில் சுப.வீ-க்கு கேள்விகள் வருகின்றன. வை.கோ. நல்லவர், வல்லவர் என மக்களிடையே 'இனி' பிரச்சாரம் செய்ததாலேயே கேள்விகள் வந்தன. ஆனால் அதற்கு பொறுப்பாக பதில் கூறாது சுப.வீ. மழுப்புகிறார்.

தி.மு.க. - ம.தி.மு.க.விற்கு நடைமுறை கொள்கைகளில் வேறுபாடு என்ன? என்ற கேள்விக்கு 'முடிந்தால் நீங்களே சொல்லுங்களேன்' என டிசம்பர் '94 இனி இதழில் மழுப்புகிறார்.

ஜூலை '96 'இனி' இதழில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டதை ஏன் வை.கோ. கண்டிக்கவில்லை? என்ற கேள்விக்கு 'வை.கோ.வைக் கேளுங்கள்' என நழுவுகிறார்.

ஜனவரி '94 'இனி' இதழில் 'வை.கோ.வை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்' என்ற கேள்விக்கு 'தோழமையோடும் விமர்சனத்தோடும்' என் பதில் கூறுகிறார். ஆனால் நேரடியாக விமர்சிக்கக் கோரி கேள்வி வந்தாலும் விமர்சிக்க மறுத்து நழுவுவதுதான் நேர்மையான அரசியலா?

இதற்கு முன் செப் '93-ல் 'வை.கோ. முதல்வரானால் தமிழர்களுக்காகப் பாடுபடுவாரென நம்புகிறேன். சரிதானா?' என்ற கேள்விக்கு 'முதல்வர் ஆகாவிட்டாலும் தமிழர்களுக்காகப் பாடுபடுவார் என நம்புவது தான் சரியானது' என நம்பிக்கையூட்டுகிறார். அதற்கான அடிப்படை எதையாவது வை.கோ.விடம் கண்டாரா? ஏதுமில்லை.

வை.கோ. புலி ஆதரவு சவடாலடித்தது கூட தி.மு.க.வில் தன்னை வளர்த்துக் கொள்வதற்காகத்தான்; தன்னுடைய பிழைப்புவாதத்திற்குத்தான் என்பதை அவரது செயல்களே காட்டுகின்றன.

தி.மு.க. தலைமை முதலிலிருந்தே புலிகளுக்கு ஆதரவாக இல்லை. ஆனால் வை.கோ. இதற்காகத் தலைமையுடன் போராடியதில்லை. தி.மு.க.விலிருந்து பிரிந்த பின் சென்னை - வெட்டுவான்கேணிப் பகுதியில் தான் வைத்திருந்த குண்டு வெடித்துப் பலியாகிய ஒரு விடுதலைப் புலிக்கு உதவியதாக ம.தி.மு.க. பிரமுகர் சுந்தரம் 'தடா'வில் கைது செய்யப்பட்டார். அப்போது வை.கோ. சுந்தரத்தைக் கட்சியிலிருந்து நீக்கித் தொடர்பில்லை என அறிவித்ததோடு, விடுதலைப் புலிகள் ஆதரவில்லை என்பதையும் பகிரங்கமாக அறிவித்தார்.

பார்ப்பன எதிர்ப்பு, புலி - ஈழ ஆதரவை கைவிட்டது மட்டுமல்ல; பாசிச எம்.ஜி.ஆர். புகழ்பாடி அ.தி.மு.க.வுடனும் கூட்டணி கண்டார். அப்போதுதான் சுபவீ, 'நந்தன்' இதழில் வை.கோ.வை "விமர்சிக்கிறார்". சாதாரண பாமரனுக்கும் புரியும்போது அதையே எழுதுவது தான் 'அரசியல் சித்தாந்த மேதை - ஆய்வாளரின்' வேலையா என்ன?

அதிலும் கூட வை.கோ.வைப் புகழ்ந்து எழுதி, இரண்டு எதிரிகளை எதிர்த்துப் போராடியவர், ஊசலாடி, ஒரு எதிரியை எதிர்க்க 'இன்னொருவருடன் கூட்டுச் சேர்ந்தது சரியில்லை என்றே எழுதுகிறார். கொள்கைகளையும் தாண்டி இவர்களை இணைக்கும் பாசக் கயிறே இனத் துரோகம்தானோ!

• மாதவன் & இராசு.

## தலையங்கம் தொடர்ச்சி

சக்திகளைச் சிதறடிக்கின்றனர். பதவிக்காக பாரதீய ஜனதாவுடனும் கூட்டுச் சேரக் கூடியவர்கள், இப்பொழுது அக்கட்சியை எதிர்ப்பதும், மதச்சார்பின்மை பேசுவதும்கூட இசுலாமியர் உட்பட சிறுபான்மையினரது ஓட்டுக்களைப் பொறுக்குவதற்குதானே தவிர, கொள்கை ரீதியிலான மாறுபாடு காரணமாக அல்ல.

இப்படிப்பட்ட சக்திகளை முன்னிறுத்தித்தான் இந்துத்துவ பரிவாரங்களை முறியடிக்கப் போவதாக மாய்மாலம் செய்கின்றது இடதுசாரி முன்னணி. மேற்கு வங்கம், கேரளா, சிறிய மாநிலமான திரிபுரா தவிர ஒருசில மாநிலங்களில் மிகச் சிறிய சக்தியாக்வே உள்ள இரண்டு போலி கம்யூனிஸ்டுகள், கரைந்து வரும் ஜனதா தளத்தையும், முலயமின் சமாஜ்வாதிக் கட்சி ஆகியவற்றையே இந்துத்துவ எதிர்ப்பில் பிரதான பங்காளிகளாக நம்புகின்றனர். இவர்களுடன் கூட்டுச் சேர்ந்தும், காங்கிரசுடன் அரசியல் பேரங்கள் நடத்தியும் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருவதைத் தடுத்து விட முடியும் என்று செயல்படுகின்றனர். எல்லாவற்றையும் விட முக்கியமானது, தேர்தல் கூட்டுகள், பேரங்கள், தரகுகள் மூலமாகவே இந்துத்துவ பாசிசம் அதிகாரத்துக்கு வருவதைத் தடுத்து விட முடியும் என்று நாட்டு மக்களை நம்ப வைக்கும் பித்தலாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்துத்துவ பாசிசம் என்பது அரசியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் பலம் பொருந்தியது. ஆயுதபாணியாக்கப்பட்ட அணிகளைக் கொண்டது. நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற் சங்கத்தையும் மாணவர் அமைப்பையும் கூடப் பெற்றிருக்கிறது. அதற்கு மாறாக சந்தா சேர்ப்பதற்கும் ஓட்டுப் பொறுக்குவதற்கும் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட அணிகளையே போலி கம்யூனிஸ்டுகள் கொண்டிருக்கிறார்கள்.

அயோத்தியில் பாபரி மசூதிக்குப் பதிலாக தேசிய நினைவுச் சின்னம் அமைப்பது, இந்திய தேசிய வெறியைத் தூண்டுவது, இனப் போராளிகளையும், கம்யூனிசப் புரட்சியாளர்களையும் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள் என முத்திரையிட்டு அரசு பயங்கரவாதப் படுகொலைகள் செய்வது போன்ற பலவற்றிலும், அரசியல் ரீதியிலும் தமது அணிகளை இந்துத்துவ பாசிசத்துக்கு இசைவாகவே பயிற்றுவித்துள்ளனர்.

ஆகவே இந்துத்துவ பரிவார எதிர்ப்பாளர்களாக நாடகமாடும் இச்சக்திகளை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தாமல் இந்துத்துவ பாசிசத்தை முறியடிக்க முடியாது. இந்துத்துவ பாசிசத்தை முறியடிக்கும் அரங்கமாக தேர்தல் களத்தை நம்பியிராமல், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தெருவிலும் அதன் பிரச்சார மேடைகள் நொறுக்கப்பட வேண்டும். மைதானங்களில் அதன் அணி வகுப்புகள் பலாத்காரமாகக் கலைக்கப்பட வேண்டும். அது கலவர வெறியாட்டங்களில் ஈடுபடும்போதெல்லாம் களத்தில் இறங்கி தாக்கி முறியடிக்க வேண்டும். அதற்காக அணிதிரட்டுவதுதான் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் இன்றைய கடமையே தவிர, தேர்தலுக்கு அணி திரட்டுவதல்ல.



படிப்பகம்

www.padippakam.com



## வங்கி - காப்பீட்டுத் துறையும் வல்லரசுகளின் காலடியில்

1997 இந்தியப் போலிச் சுதந்திரத்திற்குப் பொன்விழா ஆண்டு. ஏகாதிபத்திய - மேலாதிக்க வல்லரசுகளுக்கோ 1997 ஓர் பொன்னான ஆண்டு. ஏனெனில் உலக வர்த்தக நிறுவனம் மூலம் ஏழை நாடுகள் மீது மூன்று முக்கிய துறைகளில் கட்டுப்பாடற்ற ஆதிக்கமும் சுரண்டல் கொள்ளையையும் தொடர அவை வழிவகை செய்து கொண்டு விட்டன. தகவல் - தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு ஆகிய துறைகளை அடுத்து, கடந்த டிசம்பரில் வங்கி - காப்பீட்டுத் துறையில் கட்டுப்பாடுகளை அறவே நீக்கும் ஒப்பந்தத்தில் உலக வர்த்தக நிறுவனத்தில் பங்கேற்கும் 102 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. உலக வர்த்தக நிறுவனத்தின் மகுடத்தில் மூன்றாவது வைரக்கல் பொறிக்கப்பட்டு விட்டது என்று ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் குதூகலிக்கின்றன.

இந்திய அரசும் டிசம்பர் 13 அன்று நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்படி வங்கி, காப்பீட்டுத் துறையில் அந்நிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களைக் கட்டுப்பாடின்றி அனுமதிக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கு முன்பாகவே 15 ஏகாதிபத்திய வங்கிக் கிளைகள் தடையின்றி செயல்பட 1995-லேயே இந்திய அரசு அனுமதித்துள்ளது. புதிய ஒப்பந்தப்படி ஆண்டுக்கு 8 முதல் 12 வங்கிக் கிளைகள் செயல்பட இந்தியா அனுமதி அளிக்கும். இந்த ஏகாதிபத்திய வங்கிகளுக்கு பாரபட்சம் காட்டாமல் உள்நாட்டு வங்கிகளைப் போலவே நடத்த வேண்டும் என்ற நிபந்தனையையும் இந்திய அதிகாரிகள் முணுமுணுப்பின்றி விசுவாசமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஏற்கனவே ஆந்திர வங்கி போன்று பல சிறிய வங்கிகள் நலிவடைந்து திவாலாகும் அபாயத்தில் உள்ள நிலையில், மிகப் பலமான அந்நிய வங்கிகளை அனுமதித்தால் அவை இவற்றை விழுங்கி ஏப்பம் விட்டு விடும். தேசிய மூலதனம் என்பதே இல்லாமல் போய், அது சர்வதேச நிதி நிறுவனங்களில் கோரப் பிடியில் சிக்கி விடும். நாட்டின் ஒட்டுமொத்த நிதி நிலைமையைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதாக ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் மாறிவிடும். நிதியமைச்சகம், இந்திய ரிசர்வ் வங்கி முதலானவை எந்த அதிகாரமும் இல்லாத பொம்மைகளாகிவிடும்.

வங்கித் துறையைப் போலவே காப்பீட்டு (இன்சூரன்சு) துறையையும் கட்டுப்பாடின்றி திறந்து விட வேண்டும் என்பது தற்போதைய ஒப்பந்தத்தின் விதியாகும். ஐ.மு. அரசு கவிழ்ந்துள்ள அரசியல் நிலைமையைக் காரணம் காட்டி, காப்பீட்டுத் துறையில் எந்த உத்திரவாதமும் அளிக்காமல் இந்தியா தற்காலிகமாகத் தப்பித்துக் கொண்டுள்ளது. உலக வர்த்தக நிறுவனத்தில் இறுதிச் சுற்று பேச்சு வார்த்தைக்கு முன்பாகவே, கடந்த நவம்பர் இறுதியில் அமெரிக்கத் தரப்பு பேரம் பேசும் குழுவின் தலைவரான ஜெப்ரிலாங் இந்தியாவுக்கு வந்து, இந்திய ஆட்சியாளர்களுடன் விவாதித்துள்ளார். நிலையற்ற அரசியல் சூழ்நிலையை விளக்கி காப்பீட்டுத் துறையில் தற்போதைக்கு நெருக்கடி கொடுக்க வேண்டாம் என்று இந்திய அதிகாரிகள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அதன்படியே அமெரிக்காவும் காப்பீட்டுத் துறையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பதற்கு நிர்பந்தம் கொடுக்கவில்லை. சிங்கத்திடம் சிக்கிய வெள்ளாட்டை சிறிது நேரம் விளையாடவிட்டு அடித்துக் கொல்லும் உத்தியோடுதான் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் இப்பிரச்சினையை அணுகியுள்ளன.

கடந்த 18 மாதங்களாக ஆட்சியிலிருந்த ஐ.மு. அரசே ஒரு சிறுபான்மை அரசுதான். அந்த அரசும் கவிழ்ந்த பிறகு தேர்தல் வரை அது தற்காலிகப் பொறுப்பு அரசாகத்தான் நீடிக்கிறது. இத்தகைய அரசுக்கு நாட்டையும் மக்களையும் பாதிக்கும் பாரதூரமான விவகாரங்களில் முடிவெடுக்கவோ, ஒப்பந்தங்களில் கையெழுத்திடவோ உரிமை கிடையாது. அமைச்சரவையைக் கூட கலந்தாலோசிக்காமல், நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாமல் நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைக்கும் இந்த அயோக்கியத்தனம் அதிகார வர்க்க கும்பலால் சதிமுறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

''அரசுத்துறையைப் பாதுகாப்போம்! வங்கி காப்பீட்டுத் துறையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிக்க மாட்டோம்!'' என்று வீர வசனம் பேசிய போலிக் கம்யூனிஸ்டுகள், தமது கண்ணெதிரே இந்த அயோக்கியத்தனம் நடந்த போதிலும் வாய்மூடிக் கிடக்கின்றனர்.

## ஆந்திராவைக் கவ்விய ஆறாத் துயரம்

ஆந்திராவின் வாரங்கல் மாவட்டத்தில் கடந்த இரு மாதங்களாக அடுத்தடுத்து தொடரும் விவசாயிகளின் தற்கொலைகளால் அம்மாநிலமே துயரத்தில் மூழ்கிப் போயுள்ளது. கடந்த ஈராண்டுகளாக பருவ மழை பொய்த்துப் போனதாலும், ''ஸ்போடோடெட்ரா'' எனும் பூச்சிகளின் பெருக்கத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகள், கடன் சுமை தாளாமல் பூச்சி மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொள்கின்றனர். கடந்த இரு மாதங்களில் மட்டும் 56 பேர் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர். இவர்கள் அனைவரும் ஓரிரு ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ள சிறு விவசாயிகளாவர். காலந்தவறிய பருவ மழையால் பயிர்கள் பாதிக்கப்பட்டதோடு, பருத்திப் பயிரை அழிக்கும் பூச்சிகள் பெருக்கத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உரம், பூச்சி மருந்துகளுக்காக ஒரு ஏக்கருக்கு ரூ. 12,000-க்கு மேல் செலவிட்டும் பூச்சிகள் அழியவில்லை. பருத்தி மண்டி வியாபாரிகளிடம் வட்டிக்கு கடன் வாங்கி சிரமப்பட்டு சாகுபடி செய்த போதிலும், போட்ட முதலை எடுக்க முடியாமல் கொள்முதல் விலை குறைந்து கொண்டே போனது. கடன் சுமையோ பெருகியது. நடப்பு பருவத்திலாவது விளைச்சல் பெருகும்; கொள்முதல் விலை உயரும் என்று எதிர்பார்த்த விவசாயிகளின் நம்பிக்கை இம்முறையும் தகர்ந்து போனது. விரக்தி அடைந்த விவசாயிகள் பூச்சி மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொள்கின்றனர். வாரங்கல் மட்டுமின்றி குண்டூர், கரீம் நகர் மாவட்டங்களிலும் இத்துயரம் தொடர்கிறது.


பூச்சிகளைக் கொல்லாத பூச்சி மருந்து விவசாயிகளைக் கொன்றது; பரிதவிக்கும் விவசாயக் குடும்பம்.

பருத்தி உற்பத்தியை மேம்படுத்த இந்திய பருத்தி நிறுவனம், பருத்தி வளர்ச்சிக் கழகம், பருத்தி ஆய்வு நிறுவனம் என கணக்கற்ற அதிகார வர்க்க அமைப்புகள் இருந்த போதிலும் அவை பருத்தி விவசாயிகளைக் காப்பாற்றவில்லை. மாநிலத்தைத் தொழில்மயமாக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, கம்ப்யூட்டரும் கையுமாக அலையும் முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது கடுகளவும் அக்கறையில்லை. நிலைமை தீவிரமாகிவிட்ட பிறகு மத்திய அரசு இப்போது ஒரு குழுவை நிறுவி பருவநிலை பாதிப்புக்கான நிவாரண உதவியை நீட்டிப்பது பற்றி பரிசீலித்து வருகிறது.

இத்தனைக்கும் இந்த விவசாயிகள் மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை உணவு தானியங்களைப் பயிரிட்டு வந்தவர்கள்தான். பருத்தி பயிரிட்டால் அதிக லாபம் கிடைக்கும் என்று ஆசைகாட்டி மத்திய - மாநில அரசுகள்தான் இப்பணப்பயிர் சாகுபடிக்கு விவசாயிகளைத்



படிப்பகம்

www.padippakam.com



தள்ளின. இன்று பருத்தி சாகுபடியில் போண்டியாகி விவசாயிகளின் தற்கொலைகள் பெருகியதும் பழியை நச்சுப் பூச்சிகள் மீது போட்டு விட்டு அவை தப்பிக்கப் பார்க்கின்றன. பொதுத் தேர்தல் நெருங்கி விட்டதால், மாண்டுபோன விவசாயிகளின் குடும்பத்தினரைச் சந்தித்து நிவாரணத் தொகை வழங்கி முதல்வர் நாயுடு ''ஸ்டண்ட்'' அடிக்கிறார். ஓட்டுக் கட்சிகளோ விவசாயிகள் மீது திடீர் கரிசனம் கொண்டு இப்போது ஒப்பாரி வைக்கின்றன.

## ஈழத் தமிழர்கள் என்றால் இப்படியும் சாவா?

இலங்கையில் கடந்த டிசம்பர் 12-ஆம் நாளன்று களுத்துறை சிறையில் நடந்துள்ள சிங்கள இனவெறிப் படுகொலைகள், சந்திரிகா அரசின் கோர முகத்தை மீண்டும் திரைகிழித்துக் காட்டியுள்ளது. 1983-ம் ஆண்டு சிங்கள சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டதையடுத்து நடந்துள்ள மிகப் பெரிய தாக்குதலாகும் இது. டிசம்பர் 10-ஆம் நாள் மனித உரிமைகள் தினத்தை நினைவு கூர்ந்து உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த வேளையில் கொழும்பு - களுத்துறை சிறையில் சிங்கள கைதிகளிலேயே உள்ள ரௌடிகளுக்கும் தமிழ்க் கைதிகளுக்குமிடையே வாக்குவாதம் முற்றி கைகலப்பு நடந்தது. உணவுப் பகிர்வின் போது சிங்கள ரௌடிகளுக்கு அதிகளவு உணவு வழங்குவதும், தமிழ்க் கைதிகளுக்கு அற்ப அளவு வழங்குவதுமாக உள்ளதை எதிர்த்து தமிழ்க் கைதிகள் கேள்வி கேட்டதை ஒட்டியே இக்கைகலப்பு நடந்துள்ளது. களுத்துறை சிறையில் மொத்தமுள்ள 884 கைதிகளில் 445 பேர் தமிழர்களாவர். அவர்கள் அனைவருமே அரசியல் கைதிகளாவர். அதேநாளில் இதர சிறைகளிலிருந்து சிங்கள இனவெறி பிடித்த கைதிகள் களுத்துறை சிறைக்கு திட்டமிட்டே கொண்டு வரப்பட்டனர்.

மறுநாள்; யோகேஸ்வரன் என்ற தமிழ்க் கைதியை சிங்கள ரௌடிகள் வம்புக்கு இழுத்து மிருகத்தனமாக தாக்கி மண்டையை உடைத்தனர். சிறை ஊழியர்கள் இக்கொடுஞ்செயலை வேடிக்கை பார்த்தனரே தவிர தடுக்கவில்லை. இத்தாக்குதலைக் கண்டித்தும் தமது உரிமைகளை வலியுறுத்தியும் தமிழ்க் கைதிகள் அன்று உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த சிறை அதிகாரிகள், டிசம்பர் 12-ம் நாளன்று தமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த கொட்டடி முகாம்களின் வெளிப்புறக் கதவுகளைத் திறந்துவிட்டு சிங்கள ரௌடிகளை ஏவிவிட்டனர். பகல் 1.30 மணி அளவில் தடிகள், கற்கள், ஆயுதங்களுடன் நுழைந்த சிங்கள ரௌடிகள் ''ஈ'' பிரிவு முகாமில் இருந்த தமிழ்க் கைதிகளை கண்முன் தெரியாமல் தாக்கத் தொடங்கினர். சிறை அதிகாரிகளிடம் முறையிட்டும் அவர்கள் இத்தாக்குதலைத் தடுக்க முன்வரவில்லை. ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த இனவெறித் தாக்குதலில் தர்மலிங்கம், சிவநேசன், கான் ஆகிய மூன்று தமிழர்கள் கொல்லப்பட்டனர். 17 பேர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்ட தமிழர்களின் பிறப்புறுப்பையும் சிங்கள ரௌடிக் கும்பல் அறுத்துச் சிதைத்துள்ளது.

இக்கொடுஞ்செயலை எதிர்த்து தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளதோடு, தம்மை பாதுகாப்பான சிறைக்கு மாற்றக் கோரியுள்ளனர். மனித உரிமைகள் அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் சிங்கள சிறைகளில் தமிழர்கள் படும் அடக்குமுறைகளை அம்பலப்படுத்தி, படுகொலை செய்யப்பட்ட தமிழர் குடும்பங்களின் சார்பில் வழக்கு தொடுத்து போராடி வருகிறார். அதைத் தொடர்ந்து பாசிச சந்திரா அரசு விசாரணை நாடகமாடி வருகிறது.

## விவசாயப் புரட்சியை ஒடுக்க நிலப்பிரபுத்துவ குண்டர் படையின் பயங்கரவாதம்

அமெரிக்காவின் தெற்கேயுள்ள அதன் அண்டை நாடான மெக்சிகோவில், நிலப்பிரபுத்துவ பயங்கரவாதிகள் அப்பாவி விவசாயிகள் மீது அண்மையில் நடத்தியுள்ள கொலை வெறியாட்டத்தைக் கண்டு, அந்நாடே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. கடந்த டிசம்பர் 22-ம் நாளன்று புரட்சிகர விவசாயிகள் இயக்கத்தின் கோட்டையான சியாபாஸ் மாநிலத்திலுள்ள அக்டியல் கிராமத்துக்கு இரண்டு லாரிகளில் வந்திறங்கிய நிலப்பிரபுக்களின் குண்டர் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வழிபாடு நடத்திக் கொண்டிருந்த கிராம மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, அவர்களைக் கரும்புக் காட்டுக்கு விரட்டிச் சென்று இப்படையினர் கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர். கொல்லப்பட்ட 45 பேரில் 35 பேர் பெண்களும் குழந்தைகளுமாவர்.


நிலப்பிரபுக்களின் குண்டர் படையால் கொல்லப்பட்ட விவசாயிகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் செவ்விந்தியர்கள்.

மெக்சிகோவின் தெற்கேயுள்ள சியாபாஸ் மாநில விவசாயிகள் நிலத்திற்காகவும் அரசியல் அதிகாரத்திற்காகவும் 1994-ம் ஆண்டில் மிகப்பெரிய ஆயுதமேந்திய எழுச்சியை நடத்தினர். முன்னாளைய விவசாயப் புரட்சியின் தலைவரான எமிலனோ சாபடா என்பவரின் நினைவாக, தமது போராட்ட இயக்கத்துக்கு ''சாபடிஸ்டா தேசிய விடுதலைப் படை'' எனப் பெயரிட்டுள்ளனர். இச்செவ்விந்திய விவசாயப் புரட்சிப் படையின் கொரில்லாக்கள், எழுச்சியின் போது 6 நகரங்களைக் கைப்பற்றி தமது அதிகாரத்தை நிறுவியுள்ளனர்.

கடந்த ஆண்டில் சாபடிஸ்டா போராளிகளுக்கும் அரசுக்குமிடையிலான போர்நிறுத்த - சமாதான பேச்சு வார்த்தை தோல்வியடைந்த பிறகு, மெக்சிகோ ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் ஒத்துழைப்போடு, புதிய உத்திகளுடன் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். சியாபாஸ் பிராந்தியம் தொடர்ந்து பல மாதங்களாக இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது. சந்தைக்கான போக்குவரத்து வழிகளை அடைத்து இராணுவப் படைகள் விவசாயிகளிடம் கப்பம் வசூலிப்பதும், சூறையாடுவதுமாக அட்டூழியங்களில் ஈடுபடுகின்றன. இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, பீகாரின் ரன்பீர் சேனா போன்ற நிலப்பிரபுக்களின் குண்டர்படை விவசாயப் புரட்சியை நசுக்கி, மீண்டும் தமது அதிகாரத்தை நிறுவும் நோக்கத்தோடு தற்போதைய கொலை வெறியாட்டத்தை நடத்தியுள்ளன. பிராந்திய ஆளுநர், இராணுவ தலைமை தளபதி, ஆளுங்கட்சியினரின் ஆதரவு - ஒப்புதலுடனேயே திட்டமிட்டே இப்பயங்கரவாத வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இப்படுகொலையைத் தொடர்ந்து பஞ்சை பராரிகளான விவசாயிகள் சியாபாஸ் பிராந்தியத்திலிருந்து பாதுகாப்பான புரட்சிகர தளப் பிரதேசங்களை நோக்கி ஓடுகிறார்கள். 3000-க்கும் மேற்பட்ட கிரா



படிப்பகம்

www.padippakam.com



மங்கள் வெறிச்சோடி கிடக்கின்றன. நிலப்பிரபுத்துவ கும்பலின் கொலைவெறியாட்டத்தை மக்கள் உரிமை அமைப்புகள் அம்பலப்படுத்தி வரும் நிலையில், பீதியடைந்த மெக்சிகோ அரசு குண்டர்கள், இராணுவ வீரர்கள் - உள்ளூராட்சி அதிகாரிகளைக் கைது செய்து விசாரணை நாடகமாடி வருகிறது.

## காஷ்மீர் இந்தியாவின் காலனியா?

காஷ்மீரில் அண்மைக் காலமாக தீவிரமாகிவிட்ட அரசு பயங்கரவாத அடக்குமுறையால் அம்மாநிலமே நிலை குலைந்து போயுள்ளது. காஷ்மீரில் மோசடித் தேர்தல் நடத்தப்பட்டு, பரூக் அப்துல்லா தலைமையிலான பொம்மையாட்சி நிறுவப்பட்ட பிறகு, கடந்த 18 மாதங்களில் மட்டும் 2,770 பேர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; இவர்களின் 416 பேர் போலீசுக் கொட்டடியிலேயே கொல்லப்பட்டுள்ளனர்; 30-வது பிரிவு ராஷ்ட்ரீய துப்பாக்கிப் படையின் சீருடை அணிந்த ரௌடிகள், 20 காஷ்மீரப் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவியுள்ளனர்; தேடுதல் வேட்டைகளின் போது ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்ட வீடுகளை அரசு பயங்கரவாதிகள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தெற்கு காஷ்மீர கிராமம் ஒன்றில் 600 ஆண்டுகால தொன்மை வாய்ந்த மசூதியை இந்திய இராணுவத்தினர் கொளுத்திய அட்டூழியத்தை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது கடந்த டிசம்பர் 17-ம் நாளன்று துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.




காஷ்மீரில் தொடரும் அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிராக மனித உரிமை அமைப்பினரின் ஆர்ப்பாட்டப் பேரணி.

கடந்த நவம்பர் மாத மத்தியில் இந்தியக் 'குடியரசு'த் தலைவர் சிறீநகருக்கு வருகை தந்த போது, வீடுவீடாக சோதனை நடத்தப்பட்டு நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவரான யாசின் மாலிக் உட்பட பல்வேறு அரசியல் இயக்கங்களின் பிரமுகர்களும் முன்னணியாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டனர். 'குடியரசு'த் தலைவர் திரும்பிச் சென்ற பின்னரும் இந்த அடக்குமுறை தொடர்கிறது. பூன்ச், ஜம்மு, ராஜோரி பிராந்தியங்களில் தொடர்ச்சியாக ஊரடங்கு உத்திரவு நீடிக்கிறது. கைதான பல இளைஞர்கள் 'காணாமல் போய்விட்டதாக' அரசும் போலீசும் கூசாமல் புளுகி வருகின்றன.

காஷ்மீரில் அந்நிய சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, அந்நிய முதலீடுகளைப் பெருக்கும் நோக்கத்தோடு ''இயல்புநிலை'' திரும்பிவிட்டதாக மாய்மாலம் செய்து கடும் அடக்குமுறையை பரூக் அப்துல்லா அரசு ஏவிவிட்டுள்ளது. தனது குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் அறிவித்த எந்தவொரு வாக்குறுதியையும் கூட்டாட்சி பற்றி சவடால் அடித்த ஐ.மு. அரசு இதுவரை நிறைவேற்றவில்லை. காஷ்மீரிலிருந்து அகதிகளாக வெளியேறிய எந்தவொரு குடும்பமும் இன்று வரை காஷ்மீருக்குத் திரும்பவில்லை. அந்த அளவுக்கு அரசு பயங்கரவாத அடக்குமுறையும், மனித உரிமை மீறலும் மக்களிடம் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

## டன்லப் : பங்குச் சந்தை சூதாட்டத்தில் பலியாகும் தொழிலாளர் வாழ்வு

பின்னி மில், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், அரக்கோணம் ஸ்டீல்ஸ் ஆகிய தொழிற்சாலைகளின் வரிசையில் இப்போது சென்னை அம்பத்தூரிலுள்ள டன்லப் டயர் தொழிற்சாலையும் மூடப்படும் அபாயத்தில் உள்ளது. மே.வங்கம் ஷாகன்ஞ்சிலுள்ள இந்நிறுவனத்தில் பணியாற்றும் 4000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், அம்பத்தூர் நிறுவனத்தில் 2000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் இன்று வேலையிழந்து வீதியில் வீசியெறியப்படும் நிலையில் உள்ளனர். அண்மைக் காலமாக டன்லப் ஆலை முறையாக இயங்காததால், ஊதியம் குறைந்து, உரிய தேதியில் கூட அந்த ஊதியம் கிடைக்காமல் தாமதமாகி தொழிலாளர்கள் தத்தளிக்கின்றனர். தொழிலாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகையை கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தாமல் நிர்வாகம் முடக்கி வைத்துள்ளதால், தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கக் கடனையும் பெற முடியாமல் பரிதவிக்கிறார்கள்.

டன்லப் தொழிற்சாலை, கோயங்காவிடமிருந்து கைமாறி கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக சாப்ரியா என்ற தரகுப் பெரு முதலாளியின் பிடியில் உள்ளது. டன்லப் ஆலையின் 38% பங்குகளை வாங்கி அதன் நிர்வாகத் தலைவராக உள்ள சாப்ரியா, 1500 கோடி ரூபாய் மதிப்புள்ள டன்லப்பின் சொத்துக்களை விற்க முயற்சித்து வருகிறார். மேலும், தனது கட்டுப்பாட்டிலிருந்த 'சகோதர' (பினாமி) நிறுவனங்களுக்கு டன்லப்பின் நிதியிலிருந்து கடன் கொடுத்துவிட்டு, இப்போது திரும்பவராத கடன்கள் என்று கணக்கு காட்டி மோசடி செய்கிறார். மோசமான நிர்வாகத்தின் மூலம் நட்டமேற்படுத்தி பங்குகளை விற்று ஆதாயமடைவது, மறைமுக வழிகளில் நிதியை உறிஞ்சுவது என்பதையே தொழிலாகக் கொண்ட சாப்ரியாவின் தில்லு முல்லுகளை முதலாளித்துவப் பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்றன.

'70-களில் பம்பாயில் வானொலிப் பெட்டி பழுது பார்க்கும் கடையில் வேலை செய்து, பின்னர் துபாய் சென்று ஜப்பானிய மின்னணு நுகர் பொருட்களை விற்கும் அரபு ஷேக்குகளின் நிறுவனத்தில் பங்குதாரராகச் சேர்ந்து, 85-க்குப் பிறகு வெளிநாட்டில் வாழும் இந்தியர் என்ற சிறப்புத் தகுதியுடன் அரபு ஷேக்குகளின் பினாமியாக இந்தியப் பங்குச் சந்தையில் நுழைந்து, பெரிய நிறுவனங்களின் பங்குகளை சூதாட்டத்தில் கைப்பற்றி, வெகு விரைவிலேயே இந்தியாவின் 10 பெரும் தரகு முதலாளிகளில் ஒருவராக உயர்ந்தவர்தான் சாப்ரியா. அம்பானியைப் போலவே அவர் செய்த வங்கி - பங்குச் சந்தை மோசடிகள் நாடறிந்தவை. இதனாலேயே இந்திய வங்கிகள் சாப்ரியாவுக்கு தொழில் முதலீட்டுக் கடன் தர மறுக்கின்றன.

பங்குச் சந்தை சூதாட்டத்தின் மூலம் ஆதாயமடைவதையே நோக்கமாகக் கொண்ட சாப்ரியா கும்பல், தொழில் முதலீட்டுக் கடன் கிடைக்காததைக் காரணங்காட்டி, தொழிலாளர் வாழ்வையே சூறையாடக் கிளம்பியுள்ளது. இக்கொடுஞ் செயலைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பிரதமர், நிதியமைச்சர், தொழிலமைச்சர் ஆகியோரிடம் தொழிற் சங்கத் தலைவர்கள் நேரில் சென்று மனுகொடுத்தனர். ஜூலையில் தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்று தமிழக தொழிலாளர் நல அமைச்சரிடம் மனு கொடுத்தனர். பின்னர் கடந்த டிசம்பரில் ஆர்ப்பாட்டப் பேரணியும் 6.1.98-ல் சாலை மறியல் போராட்டமும் நடத்தியுள்ளனர். ஆனாலும் மத்திய - மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது டன்லப் ஆலைக்கு நேர்ந்துள்ள ஆபத்து மட்டுமல்ல; தாராளமயக் கொள்கையால் நாளை எந்தவொரு நிறுவனமும் பங்குச் சந்தை சூதாட்டத்திற்குப் பலியாகிவிடும் அபாயம் எழுந்து வருவதைத் தான் ''டன்லப்'' எடுத்துக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



## 'குபேரபுரி' அமெரிக்காவில் தீவிரமாகிவரும் வேலையின்மை

உலகின் மிகப் பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவில் அண்மைக்காலமாக ஆலைகளில் ஆட்குறைப்பும், கதவடைப்பும், லே-ஆப் முறையும் தீவிரமாகி தொழிலாளர்களின் வாழ்வை அச்சுறுத்தி வருகின்றன. கடந்த ஆண்டிலேயே ''ஏ.டி. அண்டு டி'' எனும் தொலைத் தொடர்பு பன்னாட்டு நிறுவனம் அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் 40,000 தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்தது. தற்போது ஈஸ்ட்மென் கோடாக், போயிங், போலராய்டு, பிலிப் மோரிஸ், ஜெனரல் மோட்டார்ஸ், லெவி ஸ்ட்டாராஸ், சிட்டிகார்ப், விர்ல்பூல், ஆப்பிள் கம்ப்யூட்டர், ஐ.பி.எம். முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மூலம் 70,000 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளன. இன்னும் பல நிறுவனங்கள் லே-ஆப் முறை மூலம் 15,000 தொழிலாளர்களின் வேலையைப் பறித்துள்ளன. சில நிறுவனங்கள் தற்காலிக கதவடைப்பை அறிவித்துள்ளன.

இலாப விகிதத்தை தக்க வைத்துக் கொள்வது, பங்குச் சந்தையில் போட்டியாளர்களை வீழ்த்தி முன்னேறுவது, இதற்கேற்ப நிறுவனத்தை மறுசீரமைப்பது என்ற பெயரில் பல பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதன்படி ''கோடாக்'' நிறுவனம் தனது ஊழியர்களில் 4 பேரில் ஒருவரை வீட்டுக்கு அனுப்ப தீர்மானித்துள்ளது. இதன் விளைவாக அமெரிக்காவிலும் பிற நாடுகளிலுமாக மொத்தம் 25,000 தொழிலாளர்கள் வேலையிழப்பர். இதே போல, வியாபார மந்த நிலையைக் காரணம் காட்டி ''போயிங்'' விமான நிறுவனம் தனது ஊழியர்களில் பத்தில் ஒரு பங்கினரை வேலையிலிருந்து விரட்டத் தீர்மானித்துள்ளது. இரட்டை இலக்க இலாப விகிதம் குறையும் அபாயம் உள்ளதைக் காரணம் காட்டி, போலராய்டு நிறுவனம் 40% உழைப்பு சக்திக்கு லே ஆப் கொடுத்துள்ளது.

இதன் விளைவாக அமெரிக்காவில் வேலையின்மை தீவிரமாகி நெருக்கடி முற்றும் என்றாலும், உடனடியாக பாதிப்பு வராது என்று ஏகாதிபத்திய பொருளாதார அறிஞர்கள் வாதிடுகின்றனர். ஏனெனில் அமெரிக்காவின் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வேறு நிறுவனங்களில் வேலை தேடிக் கொள்வார்கள் என்கின்றனர். ஆனால் அங்கேயும் வேலைக்கு உத்திரவாதமில்லை. மேலும் இத்தகைய தொழில்நுட்ப பயிற்சி பெறாத சாதாரண தொழிலாளர்களின் கதி என்ன என்பது அவர்களுக்கே வெளிச்சம்! இத்தனைக்கும் அமெரிக்காவில் பணவீக்க அபாயமோ, பொருளாதார தேக்க நிலையோ இல்லாத போது இந்த நெருக்கடி எப்படி ஏற்பட்டது என்று முதலாளித்துவ மூதறிஞர்கள் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். என்ன செய்வது? இதுதான் ஏகாதிபத்திய வல்லரசுகள் திணித்துள்ள உலகமயமாக்கலின் மகிமை!

## கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சி மாநாடு: கொள்கை வெங்காயமானது! கோஷ்டி சண்டை நிரந்தரமானது!

கொள்கை - சித்தாந்த அடிப்படையிலான மோதல் எதுவுமின்றி அப்பட்டமான பதவிவெறி - தனிநபர் சுயநலனுக்கான கோஷ்டிச் சண்டையில் கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சியின் 16-வது மாநில மாநாடு முடிந்துள்ளது. 1991-ல் கள்ளிக் கோட்டையில் நடந்த கட்சியின் மாநில மாநாட்டின் போதுதான் கோஷ்டி மோதல்கள் பகிரங்கமாக வெளிப்பட்டன. ஆனால் இப்போது மாநில மாநாட்டுக்கு முன்பே மாவட்ட, வட்ட அளவில் பதவிவெறி கோஷ்டி மோதல்கள் நடந்து, மாநில மாநாட்டில் வெளிப்படையாக மோதிக் கொள்ளும் அளவுக்கு அக்கட்சி முன்னேறியுள்ளது.

கேரளாவில் 'மார்க்சிஸ்ட்' கட்சியானது, சி.ஐ.டி.யு. கோஷ்டியாகவும் அச்சுதானந்தன் கோஷ்டியாகவும் பிளவுபட்டுப் போயுள்ளது. கடந்த இரு மாநாடுகளில் அச்சுதானந்தன் கோஷ்டி வெற்றி பெற முடியவில்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலிலும் எதிர்கோஷ்டியின் கழுத்தறுப்பால் அவர் தோல்வியைச் சந்தித்தார். பின்னர் இதர முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகளின் உத்தியுடன் பேரங்கள், சமரசங்கள், காலைவாரிவிடுதல், விசுவாசிகளை உருவாக்குதல் முதலானவற்றின் மூலம் மாவட்ட, வட்டார கட்சித் தேர்தல்களில் தமது செல்வாக்கை நிலைநாட்டினார். ஆலப்புழா மாவட்டக் கமிட்டி தேர்தலில் அச்சுதானந்தன் கோஷ்டி முழுமையாக வெற்றிபெற்றது. சாலா வட்டாரக் கமிட்டித் தேர்தலில் தில்லுமுல்லு - நாய்சண்டைகளின் மூலம் இக் கோஷ்டி வெற்றி பெற்றது. இன்னும் சில பகுதிகளில் இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே வேட்பாளர்களைக் கடத்திச் செல்வதும் மிரட்டிப் பணிய வைப்பதும் நடந்துள்ளன.



கோஷ்டிச் சண்டையில் வெற்றி பெற்ற பெருமிதம்; மாநில மாநாட்டில் உரையாற்றும் 'மார்க்சிஸ்டு' தலைவர் அச்சுதானந்தன்.

இவ்வாறு வட்ட, மாவட்ட அளவில் கட்சியில் ஆதிக்கமும் வெற்றியும் பெற்ற அச்சுதானந்தன் கோஷ்டி, ''சாராய அதிபர்களுக்கும் சி.ஐ.டி.யு. கோஷ்டித் தலைவர்களுக்குமிடையே கள்ள உறவு உள்ளது; வகுப்புவாத இந்திய தேசிய லீக் கட்சியுடன் இரகசிய உடன்பாடு வைத்துள்ளது; ஆட்சியில் ஊழல் பெருகி வருகிறது; தாழ்த்தப்பட்ட பிற்பட்ட சாதியினருக்கு கட்சியில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை'' என்று குற்றம் சாட்டி எதிர்த்தரப்பினரை அச்சுறுத்தியது. ஆனால் இச்சீரழிவுகளுக்கு எதிராக உருப்படியாக எந்த போராட்டமும் அது நடத்தவில்லை.

மாநிலக் கமிட்டித் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்றுணர்ந்த சி.ஐ.டி.யு. கோஷ்டி சமரசம் பேசிப் பார்த்தது. ஆனால் அச்சுதானந்தன் சமரசத்தை ஏற்காமல், கட்சியின் அதிகார பூர்வ வேட்பாளர் பட்டியலுக்கு மாற்றாக 9 பேரை நிறுத்தி வெற்றிபெறச் செய்தார். சி.ஐ.டி.யு. கோஷ்டியைச் சேர்ந்த எம்.எம். லாரன்சு, ரவீந்திரன், அகில இந்திய சி.ஐ.டி.யு. துணைத் தலைவரான செரியன் முதலானோர் படுதோல்வி அடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த எம்.எம். லாரன்சு கட்சி செயலாளரையோ, மாநிலக் குழுவையோ கலந்தாலோசிக்காமல் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் ''கன்வீனர்'' பதவியிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்துள்ளார். சி.ஐ.டி.யு. மாநிலத் தலைவரான பாலானந்தன் கட்சித் தேர்தலில் மோசடிகள் நடந்துள்ளதாக மத்தியக் கமிட்டிக்கு புகார் கடிதம் அனுப்பி புலம்புகிறார். சி.ஐ.டி.யு. கோஷ்டியைச் சேர்ந்த சுசீலா கோபாலன், டி.கே. ராமகிருஷ்ணன், சிவதாச மேனன் ஆகிய 'மார்க்சிஸ்டு' அமைச்சர்கள் தமது பதவி பறிக்கப்படலாம் என்று அஞ்சி அச்சுதானந்தனிடம் சமரசம் பேசுகின்றனர்.

கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சியில் பகிரங்கமாகி விட்ட கோஷ்டிப் பூசலும், 'மார்க்சிஸ்டு'கள் மத்திய அரசிலும் பங்கேற்க முயற்சித்து வருவதும் குட்டி முதலாளிய பிழைப்புவாதக் கட்சியாக முழுமையாக சீரழிவதை நோக்கி அக்கட்சி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதை நிரூபித்துக் காட்டுகின்றன. நல்ல முன்னேற்றம்தான்!



படிப்பகம்

www.padippakam.com

# திசை மாறிய அம்புகள்

**ம.க.இ.க. மீது வசைமாரிப் பொழியும் மேடையானது சென்னையில் நடந்த சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் கருத்தரங்கம்.**

விடுதலைச் சிறுத்தைகள், தமிழக மனித உரிமைக் கழகம், தியாகி இமானுவேல் பேரவை, ஆதித் தமிழர் விடுதலை இயக்கம், அம்பேத்கர் பேரவை ஆகிய ஐந்து அமைப்புகள் இணைந்து உருவாகியுள்ள சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் சார்பில், "இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் தாழ்த்தப்பட்டோர் எழுச்சியும் தமிழ்த் தேசிய அரசியலும்" எனும் தலைப்பில் சென்னையில் 10.1.98 அன்று கருத்தரங்கம் நடந்தது. இக்கருத்தரங்கில் மக்கள் கலை இலக்கியக் கழகப் பொதுச் செயலாளர் தோழர். மருதையன், ''மார்க்சியப் பார்வையில் சாதி ஒழிப்பு'' எனும் தலைப்பில் பேசுவார் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இக்கருத்தரங்கில் ம.க.இ.க. கலந்து கொள்ளாததால், ''ம.க.இ.க. வாக்குத் தவறி விட்டது'', ''ம.க.இ.க. சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று'' எனப் பொருள்படும்படி ம.க.இ.க. மீது கருத்தரங்கில் விமர்சனங்கள் வைக்கப்பட்டன. ஆனால், ம.க.இ.க. இம்முன்னணியின் எந்தவொரு அமைப்பாளரிடமும், ''கருத்தரங்கில் கலந்து கொள்வோம்'' என ஒப்புதல் அளிக்கவில்லை என்பதுதான் உண்மை.

தமிழக மனித உரிமைக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன், ''தாங்கள் நடத்தவுள்ள கொள்கை அறிமுகக் கருத்தரங்கில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்து'' புதிய ஜனநாயகத்திற்குக் கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதத்தின் அடிப்படையில் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர். காளியப்பன், கருத்தரங்கில் பங்கு கொள்ளும் அமைப்பு, நபர்கள் போன்ற விவரங்களைக் கேட்டுப் பெறுவதற்காக, அரங்க. குணசேகரனைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

''இந்த விவரங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை; மேலும், கருத்தரங்கம் சனவரி 10-க்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது'' என்று அரங்க. குணசேகரன் காளியப்பனிடம் கூறினார். அப்பொழுது காளியப்பன், ''கருத்தரங்கில் கலந்து கொள்ளுகிறோம்'' என்று அரங்க. குணசேகரனிடம் ஒப்புதல் அளிக்கவில்லை. மாறாக, ''எங்கள் அமைப்பில் (ம.க.இ.க.) பரிசீலித்து விட்டு முடிவு சொல்லுகிறோம்'' என்று தான் கூறினார்.

ம.க.இ.க.வின் முடிவு பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாமல், ''கருத்தரங்கில் மருதையன் கலந்து கொள்வார்'' என்று தன்னிச்சையாக சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி அமைப்பாளர்கள் முடிவெடுத்து விளம்பரப்படுத்தியது அராஜகமான நடைமுறையாகும். ஒருபுறம் இப்படி தன்னிச்சையாக முடிவெடுத்துவிட்டு, மறுபுறம் உண்மைக்குப் புறம்பாக, ''அரங்க. குணசேகரனிடம் அளிக்கப்பட்ட ஒப்புதல் அடிப்படையிலேயே, மருதையன் கருத்தரங்கில் பேச அழைக்கப்படுவதாக'' சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி ஒருங்கிணைப்பாளர் அ. ரூபன் கடிதம் எழுதியுள்ளார்.

(2.1.98 தேதியிட்ட) இக்கடிதத்தையும் கூட ம.க.இ.க. மாநிலத் தலைமைக்கு அனுப்பி வைக்காமல், கீழைக்காற்று வெளியீட்டகத்தின் முகவரிக்கு அனுப்பியுள்ளனர். இதனால் அவர்களின் இம்முடிவும் கருத்தரங்கம் நடைபெறுவதற்கு இருநாட்கள் முன்னதாகத்தான் ம.க.இ.க. தலைமைக்குத் தெரிய வந்தது; மேலும், கருத்தரங்கம் நடைபெறுவதற்கு முன்னதாகவே, சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் தன்னிச்சையான இம்முடிவை மறுத்து விளக்கம் தரவும் ம.க.இ.க.விற்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது.



ம.க.இ.க.வின் மீது கொச்சையான அவதூறுகளை அள்ளி வீசி, தான் அரசியல் அநாதையல்ல எனக் காட்டிட முயன்றார் இரவிக்குமார்.

கருத்தரங்கம் நடந்த நாளன்று, ம.க.இ.க. இணைச் செயலர் காளியப்பன், ''ம.க.இ.க.வின் ஒப்புதல் பெறாமலேயே, மருதையன் கலந்து கொள்வார் என சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி முடிவெடுத்த தவறான போக்கை விமர்சித்தும், எமது அமைப்பு வேலைகள் மற்றும் பிற காரணங்களால் உங்கள் கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாது'' எனத் தெரிவித்தும், தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரனுக்குக் கடிதம் கொடுத்திருந்தார்.

ஆனால், சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி அமைப்பாளர்களோ காளியப்பன் கண்டனம் தெரிவித்திருந்த கடிதத்தின் முதல் இரு பத்திகளை படிக்காமல், ''எமது அமைப்பு வேலைகள் மற்றும் பிற காரணங்களால் உங்கள் கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாது'' என்பதை மட்டும் கிண்டலாகப் படித்துக் காட்டிவிட்டு, தங்கள் தவறை மூடி மறைத்து விட்டனர்.

இது ஒருபுறமிருக்க, கருத்தரங்கில் ''தாழ்த்தப்பட்டோர் எழுச்சியும் அரச வன்முறையும்'' எனும் தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்த இரவிக்குமார், ''நிலவுகின்ற அரசைவிட, ம.க.இ.க. தான் தாழ்த்தப்பட்டோரின் முதல் எதிரி'' என்ற தனது அரிய பின் நவீனத்துவக் கண்டுபிடிப்பை அள்ளிக் கொட்டுவதற்குத்தான் அரங்கத்தைப் பிரதானமாகப் பயன்படுத்திக் கொண்டார். கருத்தரங்கில் மருதையன் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிந்து கொண்டும், கருத்தரங்கை நடத்தும் (ம.க.இ.க.வுடன் முரண்பட்டு நிற்கிற) அமைப்புகளும் ம.க.இ.க. மீது தான் அள்ளி வீசப் போகும் அவதூறுகளைத் தடுத்து நிறுத்த மாட்டார்கள் என்ற துணிவிலும் தான், இரவிக்குமார் தனது விஷக்கொடுக்கை வெளியே நீட்டினார்.

''கருத்தரங்கத்திற்கு மருதையனையும் அழைத்திருக்கிறார்கள் எனத் தெரிந்தவுடன், நான் இந்தக் கருத்தரங்கத்திற்குப் போவதா என்று கூட யோசித்தேன். இவர்களெல்லாம் தாழ்த்தப்பட்டோருக்காக நடைமுறையில் என்ன சாதித்து விட்டார்கள்? இந்த சவுண்டிப் பார்ப்பானுக்கும் அந்த சங்கராச்சாரிக்கும் வித்தியாசமே கிடையாது. ம.க.இ.க வின் வீரமெல்லாம் சேரிக்குள்தான். ஊர்த்தெருவில் போய் ஒன்றும் செய்யமாட்டார்கள். ம.க.இ.க வின் பார்ப்பன - மேல்சாதித் தலைமை தாழ்த்தப்பட்டோரின் வீட்டில் தின்று கொழுக்கிற கூட்டம்; ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர் வருவதுபோல, 'பேண்டின்' ஒரு கால்ப் பகுதியைச் சுருட்டிக் கொண்டு பாட்டாளிகளாகக் காட்டிக் கொள்கிறார்கள்.''

''உண்டியல் குலுக்குவதுதான் இவர்கள் வேலையே; சூடான விவரங்களைக் காட்டி பிசினஸ் பண்ணுகிறார்கள். ம.க.இ.க. தலைமை மார்க்சியத்தைத் தத்துவமாகப் படித்திருக்கிறதா? மார்க்ஸ் - லெனினால் விமர்சிக்கப்பட்ட பக்கூனினை, பிளெகானவைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? ஆந்திராவில் கூட, கத்தார் என்ற தாழ்த்தப்பட்டவன் இல்லையென்றால், மக்கள் யுத்தக் குழுவே இல்லை'' — இவையெல்லாம் அரங்கம் அதிர விமர்சனம் என்ற பெயரில் இரவிக்குமார் அள்ளி வீசிய கொச்சையான அவதூறுகள்.

அரங்கமே தன்து கொச்சையான, குதர்க்கம் நிறைந்த விமர்சனங்களை ரசிப்பதைக் கண்டு மகிழ்ந்து நின்ற ரவிக்குமாரை எதிர்த்து அரங்கில் ஒரேயொரு குரல் ஆவேசமாக எழுந்தது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் சென்னை பகுதி ம.க.இ.க தோழர் இராமநாதன்.

''நாங்கள் பிசினஸ் பண்ணுகிறோ



படிப்பகம்

www.padippakam.com

மென்று இந்தக் கூட்டத்திலிருந்து ஒருவராவது எங்கள் மீது குற்றஞ் சுமத்த முடியுமா? இந்த இரவிக்குமார்தான் தாழ்த்தப்பட்டோரை குடிக்கச் சொல்லுகிறார்'' என உணர்ச்சிப் பெருக்கோடு தனது நியாயமான கண்டனத்தை எழுப்பினார், இராமநாதன்.

தோழர் இராமநாதன் இந்தக் கண்டனத்தை இரவிக்குமாரைப் பார்த்து எழுப்பவில்லை; மாறாக, கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருந்த தாழ்த்தப்பட்ட சகோதரர்களிடம்தான் எழுப்பினார். ஆனால், அவர்களோ ம.க.இ.க. பக்கமுள்ள நியாயத்தைப் பார்க்க மறுத்ததோடு, ஒரு சிலர் தோழர் இராமநாதனைத் தாக்கவும் முயன்றனர்.

எனினும், சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சில தலைவர்கள் தாக்க வந்தவர்களைத் தடுத்துவிட்டு, நியாயமான கண்டனம் தெரிவித்த தோழர் இராமநாதனையும், அவருக்கு ஆதரவாக நின்ற தோழர்கள் துரை, தமிழ்ச் செல்வனையும் பாதுகாப்பாக வெளியே அனுப்பிவிட்டு, இரவிக்குமாரின் 'கருத்துச் சுதந்திரத்திற்கு' ஆதரவளித்தனர். ''நமது கூட்டங்களில் கலகம் செய்ய சிலர் முயன்று வருகிறார்கள்'' எனப் பூடகமாகக் குறிப்பிட்டு, ம.க.இ.க. மீது அபாண்டமாக பழியும் சுமத்தினார்கள்.

அதே சமயம், சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் முக்கியத் தலைவர்களுள் ஒருவரும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளருமான இரா. திருமாவளவன், மறுநாள் அவரிடம் பேட்டி எடுக்கச் சென்ற புதிய ஜனநாயகம் செய்தியாளர் பிரகாஷிடம், ''இரவிக்குமார் பேசிய விதம் முறையானதன்று; நீங்கள் வருத்தம் கொள்ள வேண்டாம்'' எனத் தனிப்பட்ட முறையில் கூறினார்.

நீங்கள் உண்மையாகவே வருந்துவதாகவே நாங்கள் நம்புகிறோம் நண்பரே! ஆனால், கருத்தரங்க மேடையில் உங்களது கருத்தைப் பகிரங்கமாக நீங்கள் கூறவில்லையே! மேடையில் மௌனமாக இருந்துவிட்டு, தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவிப்பது சந்தர்ப்பவாத அரசியல் அணுகுமுறையாகும்.

''இரவிக்குமாரின் அரசியல் அற்ற விமர்சனங்களுக்கு மேடையேறி பதில் அளிக்க தன்னை அனுமதிக்க வேண்டும்'' என புதிய ஜனநாயகம் செய்தியாளர் பிரகாஷ் சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் தலைவர்களை அணுகியபொழுது, அவர்கள் நேரத்தைக் காட்டித் தவிர்த்துவிட முனைந்தனர்; இத்துணைக்கும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவன், ''அவர்கள் (ம.க.இ.க.) எங்களை முறையாக அணுகியிருந்தால், இரவிக்குமாருக்குப் பதில் கூற மேடையிலேயே அனுமதித்திருப்போம்'' என அறிவித்ததின் அடிப்படையில்தான், பு.ஜ. அமைப்பாளர்களை அணுகியது. பதில் அளிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்திய பின்தான், அரங்கத்தில் பேசுவதற்கு அனுமதி அளித்தனர்.

''பார்ப்பன சாதியில் பிறந்துவிட்ட மருதையன், பார்ப்பன பண்போடுதான் ம.க.இ.க.விலும் இயங்கி வருகிறாரா என்பதுதான் கேள்வி. சமீபத்தில் பண்ணைப்புரத்தில் தனித் தேநீர்க் குவளையை எதிர்த்து வி.வி.மு. நடத்திய போராட்டத்தில் போலீசின் குண்டாந்தடிக்கு இரையானவர்களில் தாழ்த்தப்பட்டோர் அல்லாத தோழர்களும் உண்டு. தீண்டாமையை எதிர்த்துப் போராடுகிறார் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் வி.வி.மு. பகுதிச் செயலர் தோழர் செல்வராசு - அவர் மேல் சாதியில் பிறந்தவரெனினும் - சமீபத்தில் ராஜத் துரோகக் குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார். இப்படி தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்காகவும், தீண்டாமைக் கொடுமையை எதிர்த்தும் ம.க.இ.க. நடத்தியிருக்கும் போராட்டங்களுக்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்''.

''மேல் சாதியில் பிறந்து விட்டாலே அவன் தாழ்த்தப்பட்டோரைப் பற்றி சிந்திக்க மாட்டான் என நீங்கள் கருதுவீர்களானால், அது மனுதர்மச் சிந்தனைதான். மேல் சாதியில் பிறந்தாலும், தன்னை மாற்றிக் கொண்டு, தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்காக, அர்ப்பணிப்போடு பணியாற்ற வருகின்ற சக்திகளை அரவணைத்துக் கொள்வது அவசியமானது. மாறாக, தாழ்த்தப்பட்டோரின் விடுதலையை தாழ்த்தப்பட்டோர் மட்டுமே சாதித்துவிட முடியும் என எண்ணுவது கற்பிதமாகும்''.



**''குருட்டுத்தனமான ம.க.இ.க. எதிர்ப்பு அரசியல் தான்'' சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் திட்டமோ எனச் சந்தேகிக்கும் வண்ணம் கருத்தரங்கில் ம.க.இ.க. மீது 'குற்றச் சாட்டு'கள் அள்ளி வீசப்பட்டன.**

''நாங்கள் எடுக்கும் அரசியல் இயக்கங்களுக்குத் தேவையான பணத்தைத் திரட்டுவதற்குத்தான் உண்டியல் குலுக்குகிறோமே யன்றி, வெறும் பிழைப்புக்காக ஒரு போதும் உண்டியல் குலுக்கியதில்லை. உண்டியல் குலுக்காமலேயே, ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களிடம் நிதி உதவி பெற்றோ, முதலாளிகளிடம் இரகசியமாக உறவு வைத்துக் கொண்டோ எளிதாகப் பணம் திரட்டிவிட முடியும். அப்படி வாழ்வது அமைப்பை அதிகாரத்துவக் கட்சியாகச் சீரழித்துவிடும். மாறாக, உணவு, உடை என அனைத்திற்கும் மக்களைச் சார்ந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் உண்டியல் குலுக்குகிறோம்; அதையும் அரசியல் பிரச்சாரமாகவே செய்கிறோம்.''

''இந்த சமூக அமைப்பை மாற்றப் போராடிக் கொண்டிருக்கும் எங்கள் அமைப்பில் மட்டுமல்ல, உங்கள் அமைப்பிலும், இன்னும் இது போன்ற அமைப்புகளில் எல்லாம், தலைமை அணிகளைச் சுரண்டிக் கொண்டு சுகமாக இருக்கலாம் என்பதற்கு எந்த விதத்திலும் சாத்தியமில்லை.''

பு.ஜ. சார்பாக அளிக்கப்பட்ட பதிலின் சுருக்கம்தான் இவை. பதிலைச் சீக்கிரமாக முடித்துவிட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டதால், இரவிக்குமாரின் எல்லா விமர்சனங்களுக்கும் பதில் அளிக்க முடியவில்லை. அதே பொழுதில், இரவிக்குமார் முன் வைக்கும் பின் நவீனத்துவம் என்ற ஏகாதிபத்திய சித்தாந்தம், ''தாழ்த்தப்பட்டோரை வலிமையான எதிரியின் முன் நிராயுதபாணிகளாக நிறுத்தும் அபாயம் நிறைந்தது. எங்களது அரசியல் ரீதியான இவ்விமர்சனத்திற்குப் பதில் அளிக்காமல், கொச்சையான விமர்சனங்களைத்தான் முன் வைத்துள்ளார் என்பதை பு.ஜ. சுட்டிக் காட்டியது.

பின் நவீனத்துவத்தையும், அதைத் தூக்கிவரும் அ. மார்க்ஸ் - இரவிக்குமார் கும்பலையும் ம.க.இ.க. கடுமையாகச் சாடி வருகிறது என்பதனால்தானே, இரவிக்குமார் அவதூறுகளை அள்ளி வீசினார். அவருக்கு உண்மையிலேயே அரசியல் துணிவும், நேர்மையும் இருந்திருந்தால், அதே கருத்தரங்கில் சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் உறுப்பு அமைப்புகளையும் விமர்சித்திருக்கலாமே! சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியினரும் இரவிக்குமார் தூக்கி வரும் பின் நவீனத்துவத்தையும், வானவில் கூட்டணியையும் விமர்சிப்பவர்கள் தாமே!

சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியினரை விமர்சித்திருந்தால், ''தனக்குக் கைதட்டல் கிடைத்திருக்காது. வேறு ஏதாவதுதான் கிடைத்திருக்கும் '' என இரவிக்குமாருக்குத் தெரியும். அதனால்தான், ''எதிரிக்கு எதிரி நண்பன்'' என்ற மலிவான உத்தியை, மிகச் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டு, தான் அரசியல் அநாதையல்ல எனக் காட்டிவிட முயன்றார். இரவிக்குமாரின் இந்த நரித்தனத்திற்கு சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியினரும் பலியாகிப் போனதுதான் பரிதாபத்திற்குரியது!

இக்கருத்தரங்கில் பேசிய சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் உறுப்பு அமைப்புகளைச் சேர்ந்த அனைவரும், சாதி ஒழிப்பிற்கும், தமிழ்த் தேச விடுதலைக்கும் ஐக்கிய முன்னணி வைக்கும் திட்டமென்ன? அதை எப்படி நடைமுறைப்படுத்துகிறோம்? என்ற மையமான பிரச்சினைகள் குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை; மாறாக, ''குருட்டுத்தனமான ம.க.இ.க. எதிர்ப்பு அரசியல்தான்'' இவர்களது திட்டமோ எனச் சந்தேகிக்கும் வண்ணம், கருத்தரங்கம் நெடுகிலும் ம.க. இ.க. மீது உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டுகளைச் சுமத்தி வசை பாடினர். இரவிக்குமார் கொச்சையாக வீசிய அவதூறுகளை இவர்கள் நாகரிகமாக வைத்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

பிரகாஷ்



படிப்பகம்

www.padippakam.com

# தடையின்றித் தொடரும் போலீசின் அத்துமீறல்கள்

**வரைமுறையற்ற கைதுகள் - கொட்டடிக் கொலைகளைக் கட்டுப்படுத்த உச்சநீதி மன்றத்தால் கொண்டு வரப்பட்ட ஆணைகள் எல்லாம் வெத்து வேட்டாயின.**



மனித மிருகமாக மாறிவிட்ட போலீசாரை நன்னெறிப்படுத்துவதற்காக உச்சநீதி மன்றம் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் பதினோறு கட்டளைகளை விதித்தது. போலீசு, ஒருவரைக் கைது செய்யும் பொழுது எந்த விதமாக நடந்து கொள்ள வேண்டும்; கைது செய்யப்பட்டவரை எப்படி நடத்த வேண்டும் போன்றவை அந்தக் கட்டளைகளில் வரையறுக்கப்பட்டிருந்தன. இதைக் கடைப்பிடிக்கத் தவறும் போலீசார் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரலாம் என்றும் உச்சநீதி மன்றம் அறிவித்தது.

"கைது மற்றும் விசாரணை செய்யும் போலீசு அதிகாரி தன் பெயர் மற்றும் அடையாளம் காண்பிக்கும் அட்டை (பேட்ஜ்) அணிந்திருக்க வேண்டும்; கைது பற்றிய குறிப்புகள் (அரெஸ்ட் மெமோ) உடனடியாகத் தயாரிக்கப்பட்டு, அதில் கைது செய்யப்பட்டவரின் உறவினரிடமோ அல்லது அந்தப் பகுதியைச் சேர்ந்த முக்கியப் பிரமுகரிடமோ கையெழுத்துப் பெற வேண்டும்; கைது செய்யப்பட்டவருக்கு, தனது கைது பற்றி உறவினர்களிடம் தெரிவிக்க உரிமையுண்டு என்பதை போலீசு எடுத்துக் கூற வேண்டும்; கைது செய்யப்பட்டவர் பற்றிய தகவல்கள் 12 மணி நேரத்திற்குள் உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவர் 48 மணி நேரத்திற்கு ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் குழு மூலம் பரிசோதிக்கப்பட வேண்டும்; விசாரணையின் போது கைதி தனது வழக்கறிஞரைப் பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்" - இவையாவும் உச்சநீதி மன்றம் விதித்துள்ள கட்டளைகளுள் முக்கியமானவை.

ஆனால் போலீசோ, உச்சநீதி மன்றம் என்ன, அதற்கு அப்பன் வந்தாலும் கூட தன்னை எதுவும் செய்துவிட முடியாது என்று பழைய பாணியில் தான் தனது நர வேட்டையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. "நீதி மன்ற முனைப்பு" என்று முதலாளித்துவ அறிஞர்கள் காட்டும் பாச்சாவெல்லாம் போலீசின் முன் பலிக்கவில்லை என்பதுதான் உண்மை. கடந்த நான்கு மாதங்களில் நாடெங்கும் நடந்துள்ள போலீசின் அத்துமீறல்கள், வரைமுறையற்ற கைதுகள், மனித உரிமை மீறல்கள், கொட்டடிக் கொலைகள், போலி மோதல்களே, எந்த வேப்பிலை கொண்டு அடித்தாலும் போலீசின் கொட்டத்தை அடக்க முடியாது என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளன.

• அம்பேத்கர் நினைவு தினப் பேரணி - பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக, "பாரதீய சிறுபான்மையோர் பாதுகாப்பு சங்கத்தை"ச் சேர்ந்த 175 தாழ்த்தப்பட்டோர், டிசம்பர் 3 அன்று உ.பி.யில் உள்ள கோராக்புரிலிருந்து, குஷிநகர் விரைவுத் தொடர் வண்டி மூலம் பம்பாய்க்குப் பயணமானார்கள். இவர்கள் பயணச்சீட்டு இன்றிப் பயணம் செய்ததால், மறுநாள் காலையில் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றம் இவர்களுக்கு 9 நாட்கள் சிறைத் தண்டனை வழங்கி, ஜான்சி சிறையில் அடைக்க உத்தரவிட்டது.

இவர்கள் கைது செய்யப்பட்டது - சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது பற்றி போலீசார் இவர்களின் உறவினர்களுக்கோ, கட்சித் தலைவர்களுக்கோ தகவல் தெரிவிக்கவில்லை. அத்தாழ்த்தப்பட்டோர் தகவல் தெரிவிக்குமாறு போலீசிடம் கோரிய பொழுது, அவர்கள் அனைவரையும் ஜான்சி சிறையில் இருந்த கிரிமினல்களைத் தூண்டிவிட்டுத் தாக்கியுள்ளது. மேலும் அவர்கள் சிறைச்சாலையில் இருந்து விடுதலையான பொழுது, மனித உரிமைகளைப் பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாது, 24 பேர் முன்னங்கரங்களில், "இவன் ஜான்சி சிறையில் இருந்து விடுதலையானவன்" என முத்திரை குத்தி, அடிமாட்டினைப் போல அவர்களை அவமானப்படுத்தித் துரத்தியடித்துள்ளது.

• டிசம்பர் 10 — சர்வதேச மனித உரிமை நாளாகும். அன்று காலையில் தேசிய மனித உரிமைக் கமிசனின் தலைவர் நீதிபதி வெங்கடாசலய்யா, தில்லியில் நடந்த கருத்தரங்கில் மனித உரிமைகள் பற்றி போதித்துக் கொண்டிருக்க, தில்லி போலீசோ 55 வயதான ஹரி சங்கர் என்ற தோல் வியாபாரியை கொட்டடியில் வைத்துப் படுகொலை செய்தது. இப்படுகொலையை மறைக்க தில்லி போலீசு ஆடிய நாடகமெல்லாம் தேசிய மனித உரிமை கமிசனின் விசாரணையில் எடுபடவில்லை. கடந்த ஆண்டில் தில்லியில் நடந்த ஆறாவது கொட்டடிப் படுகொலையாகும் இது. இத்துணைக்கும் தில்லி போலீசு, வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவின் நேரடிக் கட்டுப்பாட்டில்தான் இயங்கி வருகிறது.



"இவன் ஜான்சி சிறையில் இருந்து விடுதலையானவன்" எனப் போலீசால் முத்திரை குத்தப்பட்டவர்கள்: போலீசுக்கு சாதாரண மனிதர்கள் அடிமாடுகள்தான்.

• தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் கிருஷ்ணசாமிக்கு தேனி மாவட்டத்திற்குள் நுழைய விதிக்கப்பட்டிருந்த தடை ஒரு சில நிபந்தனைகளோடு நீக்கப்பட்ட பின், அவருக்கு டிசம்பர் 7-ந் தேதி தேனியில் எடைக்கு எடை நாணயம் கொடுக்கும் விழாவொன்றை, அவ்வமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவிற்காக வைக்கப்பட்டிருந்த விளம்பர தட்டிகள் திராவகம் ஊற்றி எரிக்கப்பட்டு விட, முத்துத் தேவன் பட்டி, சீலையம்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் டிசம்பர் 2-ஆம் தேதி சாலை மறியலில் ஈடுபட்டனர். மறியலை முறியடிக்க போலீசார் தடியடி நடத்தத் தொடங்க, தாழ்த்தப்பட்டோர் எதிர்த் தாக்குதலில் இறங்கினர். பின்னர், மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் சீலையம்பட்டியில் நடந்த சமாதானக் கூட்டத்தில் பிரச்சினை மேலும் பெரிதாகி விடாமல் கட்டுப்படுத்தப்பட்டது.

ஆனாலும் வன்மம் தீராத போலீசார், தங்களைத் தாக்கிய தாழ்த்தப்பட்டோரைப்



படிப்பகம்

www.padippakam.com



பழி வாங்க சதித் திட்டமொன்றைத் தீட்டி, அதை டிசம்பர் 3-ஆம் தேதி அதிகாலையில் அரங்கேற்றினர். கொடியன்குளம் சம்பவம் போலவே, சீலையம்பட்டியில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு 500-க்கும் மேற்பட்ட போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்டது. அத்தாழ்த்தப்பட்டோரின் வீடுகளும், உடமைகளும் அடித்து நொறுக்கப்பட்டதோடு, ஆண்கள் - பெண்கள் என அனைவரையும் லத்தியைக் கொண்டு தாக்கிக் கொண்டே போலீசு வேனுக்குள் ஏற்றினர். மறியலின் போது போலீசை எதிர்த்துக் கேள்வி கேட்ட குருவம்மாள் என்ற பெண்ணைக் குறி வைத்துத் தாக்கிய போலீசார், அவரது ஆடைகளைக் கிழித்தெறிந்து, அரை நிர்வாணமாக்கி போலீசு வேனுக்குள் தூக்கியெறிந்தனர். இத்தாக்குதலில் பலருக்கு கை எலும்பு முறிந்து போனதோடு, மூன்று முதியவர்கள் இறந்து போனதாக ''நக்கீரன்'' ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

• கோவையில் முஸ்லீம்களைப் படுகொலை செய்ததும் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடியதும் போலீசு — இந்து மத வெறியர்கள் கூட்டணிதான். ஆனால் விசாரணை தொடங்கிய பின்பு, தன்னை உத்தமனாகக் காட்டிக் கொள்ள அப்பாவிகளைப் பலியிட்டு வருகிறது, கோவை போலீசு.

கடந்த டிசம்பர் மாதம் 17-ஆம் தேதி கோவை - உக்கடம் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக நின்று கொண்டிருந்தவர்களை எல்லாம் அள்ளிப் போட்டுச் சென்ற உக்கடம் குற்றப்பிரிவு போலீசார், விசாரணையில் அவர்கள் அப்பாவிகள் என்று தெரிய வந்த பின்னும், கலவரத்தின் பொழுது வன்முறையில் ஈடுபட்டதாகப் பொய் வழக்குப் போட்டு சிறையில் தள்ளிவிட்டனர்.

• தி.மு.க. எம்.எல்.ஏ. சைதை கிட்டு, சாரதா என்ற வயதான பெண்மணியை அடித்ததைக் கண்டித்து, சென்னை - கோட்டூர்புரத்திலுள்ள சித்ரா நகர் பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். உயர் போலீசு அதிகாரிகளும், பகுதி தி.மு.க. பிரமுகர்களும் சமாதானப்படுத்த முன் வந்த பொழுது, அம்மக்கள் முகத்தில் அடித்தாற் போல பதில் கொடுத்து அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டனர். ஐந்து மணி நேரத்துக்கும் மேல் நடந்த இப்போராட்டத்தின் பொழுது எதிர்த்துப் பேசியவர்களையெல்லாம் குறி வைத்த போலீசார், இரவோடு இரவாக அவர்கள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, அள்ளிச் சென்று விட்டனர்.

• பீகார் மாநிலத்தில் மாவட்ட குற்றவியல் நீதிபதி ஒருவர், நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்தாத காரணத்தால் உதவி - ஆய்வாளர் ஒருவருக்கு சிறை தண்டனை விதித்தார். இதனால் ஆத்திரங்கொண்ட ''அவசர நிலை''ப் புகழ் பகல்பூர் போலீசார், அந்நீதிபதியைத் தாக்கி தங்களைத் தண்டிக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது எனப் ''பாடம் புகட்டி''ச் சென்று விட்டனர்.

பம்பாய் நகரையே ஆட்டிப் படைக்கும் வண்ணம் மா·பியா கும்பல்கள் வளர்ந்திருப்பதற்கு, போலீசுக்கும் மா·பியா கும்பலுக்கும் இடையே இருந்து வரும் கள்ளத் தொடர்பும் ஒரு காரணம். இப்பொழுதோ தனது கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் மா·பியா கும்பலைச் சேர்ந்த கிரிமினல்களைக் கொன்றொழித்து, தன்னை சமூகக் காவலனாகக் காட்டிக் கொள்ள முயன்று வருகிறது - பம்பாய் போலீசு. கடந்த ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி முடிய பம்பாய் நகரில் மட்டும் 69 கிரிமினல்கள் போலீசாருடன் நடந்த 'மோதலில்' சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அதே பொழுதில், பம்பாய் போலீசின் இப்போலி மோதலில் அப்பாவிகள் சிலரும் பலியாகிப் போயினர்.



**தன்னை எதிர்த்த சீலையம்பட்டி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழகப் போலீசு புகட்டியுள்ள 'பாடம்'! இப்போது சொல்லுங்கள் தமிழகப் போலீசு சமூகக் காவலனா? இல்லை சட்டபூர்வ கிரிமினல் கும்பலா?**

• தாவூத் இப்ராகீம் மா·பியா கும்பலைச் சேர்ந்த ஜாவத் ·பாவ்தா என்ற கிரிமினலை, மோதலின்போது சுட்டுக் கொன்று விட்டதாக ஆகஸ்ட் 28-ஆம் தேதி அறிவித்தனர், பம்பாய் போலீசார். ஆனால், ''சுட்டுக் கொல்லப்பட்டவர் ஜாவத் ·பாவ்தா அல்ல; ஓரளவு அவரைப் போல் தோற்றம் கொண்ட 22 வயதான ஜாவத் சயாமா என்ற நடைபாதை வியாபாரி'' என்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது. ஆகஸ்ட் 26 அன்று பந்த்ரா பகுதியில் உள்ள மசூதியில் தொழுகை முடித்து விட்டு வந்த அந்த இளைஞரை சாதாரண உடையில் வந்த நான்கு போலீசார் கடத்திச் சென்று, சுட்டுக் கொன்றனர்.

• மா·பியா தலைவன் அருண் காவ்லியின் அமைப்பான அகில பாரதீய சேனாவின் பொதுச் செயலாளர் ஜிதேந்திரா தபோல்கரைக் கொன்ற வழக்கில் சேகர் மாயவன் என்பவர் பம்பாய் போலீசாரால் கைது செய்யப்பட்டார். சேகர் மாயவன் கைது செய்யப்பட்டதை அவரது உறவினர்கள் செய்தித்தாள்களின் மூலம் தான் அறிந்து கொண்டனர். போலீசார் சேகர் மாயவனை, ''சோட்டா ஷகீல் மா·பியா கும்பலை சேர்ந்தவர்; பல கொலை - கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்'' எனக் குற்றஞ் சுமத்துகிறது. ஆனால், சேகரின் உறவினர்களோ அவர் மேல் இதுவரை எவ்விதக் குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டதில்லை என்கின்றனர். இதனிடையே, சேகர் கைது செய்யப்பட்டு ஐந்துநாள் கழித்து அவரது இறந்த உடலை உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டு, உடனடியாக எரித்து விடும்படி மிரட்டிச் சென்றது, பம்பாய் போலீசு.

• சாடா பாவ்லே என்ற கிரிமினலைக் கொன்றொழிக்க பம்பாய் போலீசார் 10 லட்ச ரூபாய் செலவு செய்துள்ளனர். இத்துணை பெரிய தொகை அரசு நிதியில் இருந்து பெறப்படவில்லை. மாறாக, சாடா பாவ்லேக்கு எதிரான மா·பியா கும்பலிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எதிரும் புதிருமான மா·பியா கும்பல்களின் சட்டபூர்வ கூலிப் படையாகவும் பம்பாய் போலீசு சீரழிந்து நிற்கிறது என்பதற்கு இதைவிடவா வேறு ஆதாரம் வேண்டும்?

★☆★

விசாரணை - கைது - வழக்கு என்பதெல்லாம் இப்பொழுது போலீசின் சட்ட அகராதியில் காலாவதியாகி விட்டன; சித்திரவதை செய்து 'குற்ற'த்தை ஒப்புக் கொள்ளச் செய்வது, மோதல் என நாடகமாடி சுட்டுக்



படிப்பகம்

www.padippakam.com



கொன்று விடுவது — இவைதான் இன்று போலீசுத் துறையின் எழுதப்படாத சட்டம். அடிமட்ட போலீசுக்காரன் தொடங்கி உயர் போலீசு அதிகாரி வரை யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது.

தேனி மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ராஜேஷ்தாஸ், "சீலையம்பட்டியில் வீடுகள் மீது போலீசார் தாக்குதர் நடத்தவில்லை; அவர்களாகவே வீடுகளை உடைத்துக் கொண்டு பழியை போலீஸ் மீது போடுகிறார்கள்" எனக் கூறி போலீசுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார். திருவள்ளூர் மாவட்ட போலீசுக் கண்காணிப்பாளர் ராதாகிருஷ்ணன், போலீசின் சட்டவிரோத அத்துமீறல்களை நியாயப்படுத்தும் விதத்தில், "இப்போது உள்ள சட்ட திட்டங்களின் படி, அதற்கு உட்பட்டு திருடர்களை விசாரிப்பது இயலாத காரியம்" என வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

அதிகார வர்க்கக் கும்பலின் ஆதரவு ஒருபுறமிருக்க, போலீசின் அனைத்து சட்டவிரோத செயல்களுக்கும் ஆட்சியில் அமர்ந்துள்ள ஓட்டுக் கட்சி ஆதரவு அளிக்கத் தவறுவதேயில்லை. மகாராஷ்டிரா முதல்வர் ஜோஷி, "போலீசின் மோதல் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டியதில்லை" என்கிறார்.

கோவை கலவரத்தில் ஈடுபட்ட போலீசை கருணாநிதி கண்டிக்கக் கூட முன்வரவில்லை என்பதோடு, தனது ஆட்சியின் மீது போலீசாருக்கு அதிருப்தி ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக சலுகைகளையும், பதக்கங்களையும், விருதுகளையும் வாரி வழங்குகிறார்.

ஆந்திரப் போலீசின் போலி மோதல்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்திவரும் ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கழகத்தை முடக்குவதற்காக, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, "அவ்வமைப்பில் கல்வியாளர்கள் இணையக் கூடாது" என உத்தரவிட்டுள்ளார். போலீசின் அத்துமீறல்களைப் பற்றி மேடைதோறும் வாய்ச் சவடால் அடிக்கும் 'மார்க்சிஸ்டு'களோ தாங்கள் ஆளும் கேரளாவில், மாநில அளவில் மனித உரிமை அமைப்பினை அமைக்க மறுத்துவிட்டனர்.

இத்துணை ஆதரவு இருப்பதால்தான், போலீசார் சிறிதும் அச்சமின்றியும், குற்ற உணர்வு இன்றியும் அத்துமீறல்களை நாடெங்கும் நாள்தோறும் நடத்தி வருகின்றனர். மேலும், பிரிவினைவாதம் - பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் ஆளும் கும்பலால் கொண்டு வரப்படும் கருப்புச் சட்டங்களும், போலீசுக்கு வழங்கப்படும் சிறப்பு அதிகாரங்களும் போலீசு துறையை பாசிச மிருகமாக மாற்றி விட்டன.

"பிராங்கன்ஸ்டைனின் பூதம்" போல் வளர்ந்து நிற்கும் அதை வெறும் காகிதச் சட்டங்களைக் காட்டிக் கட்டுப்படுத்திவிட முடியாது. மாறாக, இம்மக்கள் விரோத, சட்டபூர்வ கிரிமினல் படையை ஒழிக்கக் கோரும் மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைப்பதுதான் ஒரே மாற்று வழி! ● செல்வம்

## சந்தைப் பொருளாதார சாதனை

# வீங்கி, வெடித்து, திவாலாயின தென் கிழக்காசிய நாடுகள்

*அடுக்கி வைக்கப்பட்ட சீட்டுக் கட்டுகள் சரிந்தது போல, அடுத்தடுத்து தென் கிழக்காசிய நாடுகளில் பொருளாதார திவால் நிலை. ஏகாதிபத்திய உலகெங்கும் பதை பதைப்பு, பீதி, பரிதவிப்பு. ஐ.எம்.எஃப். பறந்து சென்று பல கோடி டாலர் அவசர உதவி செய்தும் கூட, இனி இந்நாடுகள் எழுந்து நிற்க முடியுமா என்று எதிர்காலமே கேள்விக் குறியாகி விட்டது. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் எனும் ஏகாதிபத்திய ஒழுங்கமைப்பு கிழிந்து கந்தலாகிப் போனது. சூரப்புலிகளாகச் சித்தரிக்கப்பட்ட இந்நாடுகளின் பொருளாதாரம் இன்று சோகக் கதையாகி விட்டது. "கம்யூனிசம் தோற்றுவிட்டது; முதலாளித்துவம்தான் ஒரே தீர்வு" என்று ஊளையிட்ட ஏகாதிபத்திய ஓநாய்களோ இன்று இடும்பெலும்பு முறிந்து ஈனக்குரலில் மரண ஓலமிடுகின்றன.*

அன்று கிறிஸ்துமஸ் பண்டிகை நாள்: இந்தோனேஷியாவின் தலைவர் ஜாகர்தாவில் அன்று வழக்கமாக காணப்படும் உற்சாகத்துக்கு மாறாக, மக்களிடம் வெறுப்பும் ஆத்திரமும் கவலையும் குடிகொண்டிருந்தன. கடை வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன; வட்டி - அடகுக் கடைகள் மட்டுமே திறந்திருந்தன. மேட்டுக்குடியினர் தமது "மெர்சிடீஸ்"கார்களையே அடகு வைக்கும் போது ஏழைகளால் என்ன செய்ய முடியும்?

இந்தோனேஷியாவின் நாணயமான "ரூபியா"வின் மதிப்பு கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து அதளபாதாளத்துக்கு வீழ்ச்சியடைந்ததும், விலைவாசிகள் தாறுமாறாக உயர்ந்தன. நான்கு மாதங்களுக்கு முன்பு இருந்த நாணயத்தின் மதிப்பைவிட, இப்போது 70% திடீர் வீழ்ச்சி ஏற்பட்டதும் மக்கள் ஆத்திரமடைந்தார்கள். நாடெங்கும் கடத்தலும் பதுக்கலும் தீவிரமாகி, அத்தியாவசியப் பொருட்களுக்கே தட்டுப்பாடு நிலவியது. ஏழைகள் மட்டுமல்ல; வங்கிகளில் கணிசமான அளவுக்குச் சேமித்து வைத்திருந்த நடுத்தர வர்க்கத்தினரும் வங்கிகள் பணம் தர மறுத்துவிட்டதால் திண்டாடினார்கள். ஒரு நாளா, இருநாளா? மாதம் முழுக்க இதே நிலைமை என்றால் என்ன செய்ய முடியும்?

ஆத்திரமடைந்த மக்கள், "எங்களுக்கு அரிசி கொடு; உணவு கொடு!" என்று ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள். தலைநகர் மட்டுமின்றி நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் - மறியல்கள் தொடர்ந்தன. உணவு தானியக் கிடங்குகள் சூறையாடப்பட்டன. பீதியடைந்த சர்வாதிகார ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்திடமும் (ஐ.எம்.எஃப்.) வல்லரசுகளிடமும் கையேந்திக் கெஞ்சினார்கள். அமெரிக்கா 300 கோடி டாலரும், ஐ.எம்.எஃப். 1000 கோடி டாலரும் அவசர காலக் கடனாகக் கொடுத்தன. ஆனாலும் அந்நாட்டின் திவாலான பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. "ரூபியா"வின் நாணய மதிப்பு மேலும் சரிந்து கொண்டே போனது.

என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த சர்வாதிகார அதிபர் சுகார்டோ, மீண்டும் ஐ.எம்.எஃப்.பிடமும், ஜி-7 எனப்படும் பணக்கார நாடுகளிடமும் கெஞ்சினார். இதைச் சாதகமாக்கிக் கொண்டு புதிய கட்டளைகளுடன் ஐ.எம்.எஃப். உதவி செய்ய முன் வந்தது. உணவு - எரிபொருட்களுக்கான மானியங்களை உடனே நிறுத்த வேண்டும்; அந்நிய வங்கிகளும் நிதி நிறுவனங்களும் இந்தோனேஷியாவில் தடையின்றிச் செயல்பட அனுமதிக்க வேண்டும், அரசுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதோடு ஆட்குறைப்பு செய்ய வேண்டும்; ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு முன்னுரிமை தர வேண்டும் - முதலான நிபந்தனைகளுடன் பொருளாதார சீர்திருத்த ஒப்பந்தத்தை முன்வைத்தது. ஐ.எம்.எஃப்.பின் நிர்வாக இயக்குநரான மிச்சேல் காம்டேசஸ் முன்னிலையில் இந்தோனேஷிய அதிபர் சுகார்டோ இதில் கையெழுத்திட்டு நாட்டை முற்றாக அடகு வைத்துள்ளார். பெயரளவிலான இறையாண்மையையும் இழந்து, நாட்டை ஐ.எம்.எஃப். பிடம் அடகு வைக்கும் இத்

ஐ.எம்.எஃப்-பின் நிர்வாக இயக்குநர் கட்டளையிட, அடிமைச் சாசனத்தில் கையொப்பமிடும் இந்தோனேஷிய அதிபர் சுகார்டோ.





படிப்பகம்

www.padippakam.com

துரோகத்தனத்திற்கு எதிராக நாடெங்கும் மாணவர்களும் தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்கின்றனர்.

இந்தோனேஷியாவின் திவால் நிலைக்கு முன்பாகவே, ''ஆசியப் புலிகள்'' என்றழைக்கப்பட்ட தென் கொரியா, தைவான், ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நாணய மதிப்பு வீழ்ச்சியடைந்து திவால் நிலையை எட்டின. அதற்கு முன்பாக தாய்லாந்து திவாலாகி மஞ்சள் கடுதாசி கொடுத்தது. கடந்த ஜனவரியில் ஹாங்காங்கிலிருந்து டோக்கியோ வரை, சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் வரை அனைத்துப் பங்குச் சந்தைகளும் சரிந்து விழுந்தன. அதைத் தொடர்ந்து தென்கிழக்காசியாவின் பிலிப்பைன்ஸ், புருனே, லாவோஸ், வியட்நாம் - என அனைத்து நாடுகளிலும் நாணய மதிப்பு 40% முதல் 70% வரை வீழ்ச்சியடைந்தது. இந்நெருக்கடிச் சேற்றிலிருந்து மீள வழிதெரியாமல் மீண்டும் ஐ.எம்.எஃப்.பிடம் கடன் வாங்குவது, அதன் கட்டளைகளை ஏற்று அடிமைப்படுவது என்று இந்நாடுகள் புதை சேற்றில் சிக்கித் தவிக்கின்றன.

★☆★

தென்கிழக்காசியப் பொருளாதார வீழ்ச்சிக்கும் திவால் நிலைக்கும் காரணம் என்ன? ஆசியப் புலிகளிலேயே முதன்மையானதும், உலகின் 11-வது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடு என்றும் பெருமையாக பேசப்பட்ட தென் கொரியாவின் வீழ்ச்சியே இங்கு வகை மாதிரிக்குப் பொருத்தமாக உள்ளது.

தென் கொரியாவின் பொருளாதாரம் ஏற்றுமதியை முற்றாகச் சார்ந்திருப்பதாகும். மோட்டார் வாகனங்கள், உதிரி உறுப்புகள், வாகன ஒருங்கிணைப்பு முதலானவையே அதன் மையமான பெரிய தொழிலாகும். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் வங்கிகள் - நிதி நிறுவனங்களிடம் பெருமளவு தொழில் முதலீட்டுக் கடன்களைப் பெற்று, பங்குச் சந்தை சூதாட்டத்தில் செயற்கையான வளர்ச்சியைக் காட்டி, ஏகாதிபத்திய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து பன்னாட்டு நிறுவனங்களாக வளர்ந்தன. இவற்றுக்குத் தொழில் முதலீட்டுக் கடன்களை அளித்துள்ள தென் கொரிய வங்கிகளோ அந்நிய நிதி நிறுவனங்களிடம் பெரும் வட்டிக்கு குறுகியகாலக் கடன்களைக் கோடிக்கணக்கில் பெற்று, தென் கொரிய தொழில் நிறுவனங்களில் தாமும் ஒரு பங்குதாரராகிப் பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபட்டன. தென் கொரிய தரகுப் பெரு முதலாளித்துவ நிறுவனங்களின் மதிப்பை சர்வதேச சந்தையில் உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்காகவே மீண்டும் மீண்டும் பெருமளவு கடன்கள் வாங்கப்பட்டன. சர்வதேசச் சந்தையில் சிறு சலனம் ஏற்பட்டால் கூட, அது தென் கொரியத் தொழிலையும் ஏற்றுமதியையும் கடுமையாகப் பாதிக்குமளவுக்கு இந்தச் சூதாட்டம் தொடர்ந்தது.

இந்நிலையில், ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துக்கு விதிக்கப்பட்ட தலைவிதியின் காரணமாக, அண்மைக் காலமாக மந்த நிலை நீடிக்கத் தொடங்கியதும், அது தென் கொரிய ஏற்றுமதியைக் கடுமையாகப் பாதிக்கத் தொடங்கியது. ஏற்றுமதியைச் சார்ந்திருந்த பல பெரிய நிறுவனங்கள் நெருக்கடியில் சிக்கி அடுத்தடுத்து மூடப்பட்டன. இந்நிறுவனங்கள் வங்கிகளிடம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தத்தளித்தன. இதனால் வங்கிகளின் கடன் சுமை தீவிரமாகி தடுமாறி விழுந்தன. குறுகிய காலக் கடன்கள் மட்டும் 2000 கோடி டாலருக்கு இருந்தது. மொத்த அந்நியக் கடனோ 12000 கோடி டாலருக்கு மேலாகி குரல்வளையை நெறித்தது.

ஏற்றுமதி குறைந்ததால் ஒருபுறம் உற்பத்தி தேக்கம், மறுபுறம் அந்நிய நிறுவனங்களிடம் பெற்ற குறுகிய காலக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத திவால்நிலை எனும் புதை குழியில் தென் கொரியா வீழ்ந்தது. இதன் விளைவாக தென்கொரிய நாணயம் மதிப்பிழந்து செல்லாக் காசாகியது. பங்குச் சந்தையில் பெருத்த வீழ்ச்சி; ஆலை மூடல்கள்; விலைவாசி ஏற்றம்; கடத்தல், பதுக்கல், உணவுத் தட்டுப்பாடு என்று சங்கிலித் தொடர் போல அடுத்தடுத்த விபரீத விளைவுகளால் நாடே நிலை குலைந்து போனது.

ஐ.எம்.எஃப்.பும் அமெரிக்காவும் ஓடோடி வந்து நிதியுதவி செய்த போதிலும், திவாலான தென் கொரியாவைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. மோட்டார் வாகனத் தொழிற்சாலைகள் செயலிழந்து முடங்கிக் கிடக்கின்றன. கடந்த டிசம்பரில் மட்டும் 1,20,000 பேர் வேலையிழந்து தவிக்கின்றனர். பங்குச் சந்தை சூதாட்டத்தில் நட்டமடைந்தவர்களும், திவாலான ஆலை முதலாளிகளும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

தென் கொரியாவின் தர்மகர்த்தாவாக மாறியுள்ள ஐ.எம்.எஃப்.பின் கடுமையான நிபந்தனைகளை நேர்மையாகச் செயல்படுத்துவேன் என்று உறுதியளித்து, இன்னும் கூடுதல் உதவியளிக்குமாறு அந்நாட்டின் அதிபர் கெஞ்சுகிறார். ''நாலரைக் கோடி தென் கொரிய மக்களுக்குத் துன்ப துயரமான எதிர்காலம்தான் காத்திருக்கிறது. துன்பங்கள் இல்லாமல் பொருளாதார வளர்ச்சியைக் காண முடியாது'' என்று நாட்டு மக்களுக்கு அவர்

## ஜப்பானை அச்சுறுத்தும் சூதாட்டப் பொருளாதாரம்

உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசாகிய ஜப்பானிலும் தென்கிழக்காசிய நாடுகளைப் போலவே பங்குச் சந்தையில் சரிவு, பங்கு பத்திர தரகு நிறுவனங்களின் திவால் நிலை, வங்கிகள் மூடப்படுதல் என அராஜகம் தொடர்கிறது.

ஜப்பானின் 4-வது பெரிய பங்கு பத்திர தரகு நிறுவனமான ''யாமைசி'' கடந்த டிசம்பரில் திவாலாகி மூடப்பட்டது. இது ஆண்டுக்கு 2500 கோடி டாலர் அளவுக்கு வியாபாரம் செய்து வந்த மிகப்பெரிய நிறுவனமாகும். நெருக்கடி முற்றியதும் இந்நிறுவனத்துக்கு 650 கோடி டாலர் அளவுக்குச் சிறப்புக் கடன்கள் கொடுத்து வங்கிகள் தூக்கி நிறுத்த முயற்சித்தும் கூட, அந்நிறுவனம் மரணப் படுக்கையில் விழ்ந்து விட்டது. போலி நிறுவனங்களை உருவாக்கி, அவற்றை பங்குச் சந்தையில் உலவ விட்டு, அவற்றின் மீது சூதாட்டம் நடத்தியதாலேயே யாமைசி நிறுவனம் வீழ்ச்சியடைந்தது என்று முதலாளித்துவ அறிஞர்களே அதன் மோசடிகளை இப்போது அம்பலப்படுத்துகின்றனர். இதே போல கடந்த செப்டம்பரில் ''சான்யே'' என்ற பங்கு பத்திர தரகு நிறுவனம் திவாலாகிப் போனது.



திவாலான யாமைசி நிறுவனத்திலிருந்து தமது முதலீட்டைத் திரும்பப் பெறக் காத்திருக்கும் ஜப்பானிய ஏமாளிகள்.

ஜப்பானின் 64 பெரிய வங்கிகளில் 40-வது இடத்தை வகிக்கும் டோக்கியோ சிட்டி வங்கி அண்மையில் திவாலாகிப் போயுள்ளது. பங்கு பத்திர நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தே இவ்வங்கி போண்டியாகிப் போயுள்ளது. இது தவிர இன்னும் 5 வங்கிகள் திவாலாகும் அபாயத்தில் உள்ளன. இவை தாய்லாந்து, தென் கொரியா, இந்தோனேஷியா நிதி நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்து நெருக்கடியில் சிக்கியுள்ளன.

ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தைவிட கடன்களின் சுமை 20% அதிகமாக உள்ளதென்று அந்நாட்டு நிதியமைச்சகமே ஒப்புக் கொள்கிறது. தற்போதைக்கு ஐ.எம்.எஃப்.பின் கடன் அவசியமில்லை என்றாலும், தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க ஐ.எம்.எஃப்.பின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கையைப் பின்பற்றுவது கட்டாயமாகிவிட்டது என்று ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

பங்குச் சந்தை சூதாட்டத்தில் நடக்கும் பாய்ச்சலைக் காட்டியே ஜப்பானின் பொருளாதாரம் வளமை கொழிப்பதாக ஏகாதிபத்தியவாதிகள் ஆரவாரம் செய்தனர். அத்தனையும் மோசடி என்பதை ஜப்பானில் தீவிரமாகி விட்ட பொருளாதார நெருக்கடியும் அராஜகமுமே நிரூபித்துக் காட்டிவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com




நாட்டைத் திவாலாக்கி ஐ.எம்.எஃப்-பிடம் அடகுவைத்த துரோகிகளுக்கு எதிராக தென்கொரிய மாணவர் - தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்.

உபதேசிக்கிறார். ஆனால் நாடெங்கும் தொழிலாளர்களும் மாணவர்களும் ஐ.எம்.எஃப்.பின் ஆதிக்கத்துக்க எதிராக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தென்கிழக்காசிய நாடுகளிலேயே பொருளாதார பலமிக்க தென்கொரியாவுக்கே இந்த கதியென்றால்,' மற்ற நாடுகளின் திவால் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அதிலும் சுற்றுலா - களிவெறியாட்டப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளதாய்லாந்து, ஐ.எம்.எஃப். பின் கடுமையான கட்டளைகளால் விழி பிதுங்கித் தவிக்கிறது.

முன்பு வெனிசூலா, பிறகு மெக்சிகோ என்று ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கூட்டமைப்பிலுள்ள நாடுகள் திவாலான போது, ஏதோ விதிவிலக்கான நிகழ்ச்சியாக ஏகாதிபத்தியவாதிகள் சித்தரித்தனர். ஆனால் இன்று அடுத்தடுத்துப் பல நாடுகள் திவாலாகி, ஏகாதிபத்தியப் பொருளாதாரமே தோல்வியடைந்து அழுகி நாறும் நிலையில், ஏப்படி நியாயப்படுத்துவது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர்.

மேலும், தற்போதைய தென்கிழக்காசிய நெருக்கடியை எப்படித் தீர்ப்பது? இது எந்தத் திசையில் செல்லும் என்று புரியாமல் ஐ.எம்.எஃப். அதிகாரிகளே திணறுகின்றனர். திவாலான இந்நாடுகளை மீட்பது என்ற பெயரால் புதிய நிபந்தனைகளுடன் நிதியாதிக்கத்தைத் தீவிரமாக்குவது ஒன்றே அவர்களது இலட்சியமாக உள்ளது. தென்கிழக்காசிய நாடுகளுக்கு அவசர உதவி செய்த கிளிண்டனின் கொள்கைக்கு எதிராக அமெரிக்க காங்கிரசில் குடியரசுக் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மெக்சிகோவைப் போல இந்நாடுகளைக் காப்பாற்ற முயற்சிக்கக் கூடாது; நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு ஆதிக்கத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக உள்ளது.

★☆★

“தென் கிழக்காசிய நாடுகளைப் போல இந்தியாவில் பொருளாதாரச் சரிவு ஏற்பட வாய்ப்பே இல்லை. ஏனெனில் அந்நாடுகள் பெருமளவு குறுகிய காலக் கடன்களைப் பெற்றதால் திக்கு முக்காடின. ஆனால் இந்தியாவோ நீண்ட காலக் கடன்களைத்தான் பெற்று வருகிறது'' என்ற இந்திய ஆட்சியாளர்களும் ஏகாதிபத்திய எடுபிடிகளும் கயிறு திரித்து வருகின்றனர். ஆனால் இந்தியப் பொருளாதாரம் சுயசார்பை இழந்து விட்ட நிலையில், ரூபாயின் மதிப்பைத் தீர்மானிப்பதே அமெரிக்க டாலர்தான் என்றாகி விட்ட நிலையில் இந்தியாவுக்கும் இத்தகைய அபாயம் ஏற்படாது என்று எந்த முட்டாளும் நம்ப மாட்டான்.

இந்தியா மட்டுமல்ல; பொருளாதார சுயசார்பு, அதனடிப்படையிலான தொழில் வளர்ச்சி என்பது போய், சுயசார்பை இழத்தல், ஏற்றுமதிக்கான உற்பத்தி, ஊக வணிகம் என்ற நிலை எப்போது ஏற்பட்டதோ, அப்போதே உலகின் பல நாடுகள் நெருக்கடியில் சிக்கிக் கொண்டு விட்டன. அதையே தீவிரப்படுத்தும் தாராளமயம், உலகமயம், கட்டுமான சீர்திருத்தம் ஆகியன ஏகாதிபத்திய நுகத்தடியில் பிணைத்து, வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே மீண்டும் கடன் வாங்குவது என்கிற திவால்நிலையை எதிர்கொண்டு நிற்கின்றன.

இதற்கு நேர்மாறான பொருளாதாரக் கட்டுமானத்தைக் கொண்டிருந்த சோசலிசம் அதிசயத்தக்க பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. புரட்சி முடிந்த பிறகு, 1950-களில் சோவியத் ஒன்றியத்திடம் பெற்ற கடன்களை 1965-லும், உள்நாட்டுக் கடன்களை 1968-லும் பாக்கியின்றி முற்றாக அடைத்து, பணவீக்கமோ - தேக்கமோ, விலையேற்றமோ இன்றி சுயசார்புடன் மாவோ தலைமையிலான செஞ்சீனம் பீடுநடை போட்டதை உலக வரலாறு நன்கறியும். இத்தகைய மகத்தான அதிசயங்களை சாதித்துக் காட்டிய சோசலிசக் கட்டமைப்பை நயவஞ்சமாக வீழ்த்தி, தோல்வியடைந்து விட்டதாக ஊளையிட்ட ஏகாதிபத்திய ஓநாய்கள், இன்று தமது முதுகெலும்பு முறிந்து ஒப்பாரி வைக்கின்றன.

முடியாது! இனியும் சகித்துக் கொள்ளக் கூடாது. நாடுகளைத் திவாலாக்கி, துன்ப துயரங்களையும் சீரழிவையும் அடிமைத் தனத்தையுமே விளைவாகக் கொண்ட தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் ஏகாதிபத்திய கட்டமைப்புக்கு உலக மக்கள் இனியும் இசைந்து செல்ல முடியாது. தென் கிழக்காசிய நாடுகளைப் போலவே இந்தியாவும் திவாலாகும் அபாயத்தில் உள்ள நிலையில், இந்திய மக்கள் விழித்தெழ வேண்டும். தென்கிழக்காசிய மக்களுக்கு ஆதரவாக, ஏகாதிபத்தியங்களுக்கும் ஐ.எம்.எஃப். முதலான அதன் ஆதிக்கக் கருவிகளுக்கும் எதிரான போராட்டத்தைத் தொடர அணிதிரள வேண்டும்.

• மனோகரன்

நாட்டைத் திவாலாக்கிய துரோக ஆட்சியாளர்களுக்கு எதிராக தாய்லாந்து தொழிலாளர் – அரசு ஊழியர்களின் போர்க்கோலம்.





படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா




கடந்த வருடம் மைய அரசு அறிவித்திருந்த "தாமாகவே முன் வந்து வருமானத்தை அறிவிக்கும் திட்டத்தின்" (VDIS) படி, தங்களது இரகசிய சொத்துக்களையும், பதுக்கி வைத்திருந்த கருப்புப் பணத்தையும் வெள்ளையாக மாற்றிக் கொள்ளக் காத்திருக்கும் கனவான்களின் கூட்டம்தான் இந்தப் படம். இத்திட்டத்தின்படி, கணக்கில் காட்டப்படாத அசையாத சொத்துக்கள், இரகசிய உள்நாட்டு - வெளிநாட்டு முதலீடுகள், பதுக்கி வைத்திருந்த வெள்ளிப் பாத்திரங்கள், தங்க - வைர நகைகள் — இப்படி எதை வேண்டுமானாலும் 1997 டிசம்பர் 31-க்குள் வெள்ளையாக மாற்றிக் கொள்ளலாம் என அறிவித்திருந்தது மைய அரசு. "300 சதவீதம் வரி விதிக்கப்பட வேண்டிய இனங்களுக்குக்கூட 30 சதவீதம்தான் வரி; பெயர்கள் பரம இரகசியமாக வைக்கப்படும்; வழக்குத் தொடர மாட்டோம்; பழி வாங்க மாட்டோம்" - இப்படி பல வாக்குறுதிகள்; சலுகைகள் அள்ளி வீசப்பட்டன. இத்திட்டம் பற்றிய விளம்பரத்திற்காக 30 கோடி ரூபாய் வாரி இறைக்கப்பட்டது.

ஆனாலும் பல லட்சம் கோடி ரூபாய் கருப்புப் பணம் புழங்கும் நமது நாட்டில், சிதம்பரம் விரித்த வலையில் வெறும் 33,000 கோடி ரூபாய் தான் விழுந்தது. கருப்புப் பணக் கும்பலோ, "வரிச் சலுகைகள் எங்களுக்குத் தேவையில்லை; வருமான வரி விதிப்பையே எடுத்து விடு" எனக் கொக்கரிக்கிறது. ஆட்சியாளர்களோ சட்டத்தின் மூலம் இக்கிரிமினல்களின் குரல் வளையைப் பிடிப்பதை விட்டு விட்டு, ஒவ்வொரு பத்தாண்டுக்கொரு முறையும் வி.டி.ஐ.எஸ். போன்று பொது மன்னிப்புத் திட்டங்களை அறிவித்து, "நீங்களா மனசு வைச்சு ஏதாவது போடுங்கய்யா" என அவர்களின் காலில் விழுந்து எழுகின்றனர்.

இதோ, காங்கிரசு ஆளும் மத்தியப் பிரதேச மாநிலப் போலீசின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிப் போன இவர்கள் அனைவருமே அம்மாநிலத்தைச் சேர்ந்த அப்பாவி நடுத்தர விவசாயிகள். இயற்கையின் சீற்றத்தால் தங்களது பயிர்கள் நாசமாகிப் போனதால், நிவாரணம் கேட்டுப் போராடியதுதான் இவர்கள் செய்த 'குற்றம்'! கடந்த டிசம்பர் மாதம் வீசிய புயல்காற்று, ஆலங்கட்டி மழையின் காரணமாக அம்மாநிலமெங்குமே விவசாயம் பாழ்பட்டு, விவசாயிகளுக்கு 12,000 கோடி ரூபாய் நட்டமேற்பட்டது. இதற்கு நட்ட ஈடு கோரி விவசாயிகள் "கிஸான் சங்கர்ஷ் மோர்சா" எனும் அமைப்பில் அணிதிரண்டு, சனவரி 11-ஆம் தேதியன்று முல்தாய் நகர வட்டாட்சி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

15,000 விவசாயிகள் திரண்டு நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தின் இடையே ஏற்பட்ட சிறு சலசலப்பைச் சாக்காகக் கொண்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியது போலீசு. கண் எரிச்சல் தாளாமல் அங்குமிங்கும் சிதறி ஓடத் தொடங்கிய நிராயுதபாணியான அவ்விவசாயிகளை, 100 போலீசார் சுற்றி வளைத்துக் கொண்டு, குருவி சுடுவது போல சுட்டு வீழ்த்தினர். 17 விவசாயிகள் அதே இடத்திலேயே துடிதுடித்து மாண்டு போக, 43 பேர் குண்டுக் காயங்களோடு உயிருக்குப் போராடுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்திற்கே எமனாக நிற்கும் கருப்புப் பணக் கிரிமினல்களுக்கு வரிச் சலுகைகள்; அரசு மரியாதை! நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயிகள், நிவாரணம் கேட்டுப் போராடினாலோ போலீசு அடக்குமுறை; துப்பாக்கிச் சூடு! இப்போலி சனநாயகத்தை இன்னுமா நம்பி ஏமாறுவது?



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Reg. No. TN/MS(S) 622 / 98

# கூட்டணிக் குழப்பமே நாட்டு அரசியலானது



படிப்பகம்